# பொன்னி

469

PONNI • 10-7-52 • 4 அணா



N52.6.10
197812



இதழோரப் புன்னகையின் பொருள்....!

—மருமகளில் பத்மினி



காதல் · பிறக்கிறது கைப்பிடிப்பிலே!

—காதலில் பானுமதியும், நாகேஸ்வரராவும்

# ஜூன் 21வ முதல்

தமிழ்நாட்டில் எல்லா முக்கிய நகரங்களிலும்
வெற்றிகரமாக நடைபெறுகிறது




பானுமதி, நாகேஸ்வரராவ் நடிக்கும்

## பரணியின் காதல் (தமிழ்)

மறக்கமுடியாத மனோகர காதல் சித்திரம்.

பூரண உரிமையாளர்: G. P. பிலிம்ஸ், பொரையார்.

# 35 Persons awarded prizes in our puzzle No. 11.

1st . Prize 1, B. Thangavelu, Perambur. 2, P. A. Sebastian, Coonoor. 3, M. A. Mohamed Malegaen. 4, H. I. G. R. Bansode Mhow. 5, P. Parameswaran, Salem. 6, N. Nachimuthu Chettiar, Palam. 7, Noor, Gahazipur. 8, M. S. Thangaswami. Devakotta 9, S. K. Jain, Jammu Tawi. 10, M. J. Samuel Travancore. 11, G. Natarajan, Madras. and 3rd prize 20. 5th prize 4 persons.

**Full particulars are published in the Rainbow dated 10-6-52**

ரிஜிஸ்டர் நெ. 277

# ரூ. 25,000 பரிசு

போட்டி நெ. 13

MS Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். மேற்கண்ட பரிசுகள் எங்கள் கம்பெனியின் நிபந்தனைப்படி வசூலுக்கு தருந்தபடி பகிர்ந்து கொடுக்கப்படும்.

**AMBAL'S PUZZLES**

KEY B. NO. 11 *31 TO 4/5/52

| | | | |
|---|---|---|---|
| 38 | 40 | 41 | 35 |
| 31 | 45 | 44 | 34 |
| 43 | 33 | 32 | 46 |
| 42 | 36 | 37 | 39 |

We hereby certify that the above is the solution in original deposited with us by Ambal's Puzzles No. 11 on 20/5/52 in a sealed cover which was opened in our premises to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

*For The Premier Bank of India Ltd.*

V. Ramanathan 13/6/52 Notary.

**முடிவு தேதி 12-7-52** **விடை 28-7-52**

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

**190**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— *40* முதல் *55* வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் *190* வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தருந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

# AMBAL PUZZLE NO 13

**28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS-21**

## உங்கள் தலைப்பு

போலீஸ்காரர்களும் தமிழ்ச் சொல்லுக்குள் அடங்கிவிட்டார்கள். அவர்கள் மட்டும் எப்படித் தப்ப முடியும்? தலைப்புப் போட்டியில் கலந்துகொள்ளும் நண்பர்களின் ஆர்வத்தை முற்றும் உணர ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. சென்ற இதழ் வெளிவரவில்லையல்லவா? அவர்களுக்கு எத்தனை ஆத்திரம்! என்ன கோபம்! 'முடிவும் தெரியவில்லை; புதுப் படமும் இல்லை' என்று முறையிட்டு நிறையக் கடிதங்கள் வந்திருக்கின்றன. போட்டியில் மாணவர்கள் பெருவாரியாகக் கலந்துகொள்வதாகவும், அவர்களுக்குப் பள்ளி ஆசிரியர்கள் இவ்வகையில் ஊக்கம் தருவதாகவும் அறிகிறோம். தமிழ்ப் பயிற்சிக்கும் தலைப்புப் போட்டி உதவுகிறது என ஒரு தமிழ் ஆசிரியரே எழுதியிருக்கிறார். ஆர்வம் இவ்வாறு பற்றிப் படர்வதைக் கண்டு மகிழ்கிறோம்.

இந்த இதழ் மேலட்டைப் படம் திருவாங்கூர் கலை விளக்கமாகும். நடனத்தின்போது அணிந்துகொள்ளும் முகமூடி ஒன்றைச் செய்து முடிக்கும் காட்சியை நாம் காண்கிறோம். முகமூடி ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றும்; அவலட்சணத்தை அழகாகவும் ஆக்கும். அட்டையில் காணும் முகம் உயர்ந்த கலைப் படைப்பாக ஒளிவீசுகிறது! அதை உருவாக்கும் சிற்பியின் கைகள் எத்தனை கருத்தோடு பணியாற்றுகின்றன! உங்கள் தலைப்புகளை 20-7-52-க்குள் அனுப்புங்கள். சிறந்த தலைப்புக்கு ரூ. 5 பரிசு அளிக்கப்படும்.

புகைப்படம் :
என். ராமகிருஷ்ணு

# பொன்னி

## பொருளடக்கம்

மலர் 6 ‖ ஜூலை 10, 1952 ‖ இதழ் 10

திருவள்ளுவர் ஆண்டு 1983
ஆனித் திங்கள் 27-ம் நாள்

| | | |
|---|---|---|
| உங்கள் தலைப்பு | ... | 3 |
| நம்பிக்கைத் தீர்மானம் | ... | 5 |
| துரோகமும் கருணையும் | ... | 9 |
| ராசா | ... | 12 |
| சம்மதம் | ... | 17 |
| உயர்திரு அம்மையார் | ... | 18 |
| ஆள் மாறாட்டம் | ... | 25 |
| பெண்கள் முன்னேற்றம் | ... | 31 |
| தம்பி (சிறுவர் தொடர்கதை) | ... | 34 |
| இரு மனைவிகள் | ... | 38 |
| ஆடும் மாடும் (தொடர்கதை) | ... | 45 |
| பொழுது போக்கு | ... | 58 |
| பாவம், பரமசிவம்! | ... | 62 |
| இலக்கியம் வளர...! | ... | 64 |

★

பொன்னி சந்தா விவரம்: உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0; ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி உண்டு.

# The Watch of Proven Superiority

8¾ Chrome Steel back; Water proof; incabloc; shock absorber; lever 17 Jewells; centre Second hand. Rs. 120. Rolled gold steel rate Rs. 150.

10½ Chrome Steel back; Water proof; 17 Jewells; lever incabloc; Rs. 110. Rolled gold steel rate Rs. 150.



**PHYLEX**

obtainable only from

**JALAL & SONS**

GOVT. & RAILWAY SUPPLIERS

RATTAN BAZAAR · MADRAS



விருந்து இலக்கிய வரிசை

பதிப்பாசிரியர் :

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை எம். ஏ. எல். டி.

**11**

ஸ்வீடன் நாட்டுச் சிறுகதைகள்

## கல் மனிதன்

**இப்பொழுது எங்கும் விற்பனையாகிறது**

**தனிப்பிரதி விலை அணா 8**

எல்லாப் புத்தகங்களும் தொடர்ந்து பெற விரும்புவோர் 12 புத்தகங்களுக்கு ரூ. **6—0—0** அனுப்பவேண்டும்

**பொன்னி லிமிடெட்**

**த. பெ. எண். 1165 :: சென்னை-21.**

# நம்பிக்கைத் தீர்மானம்

சென்னை சட்டசபை வரவு செலவுத் திட்டப் பரிசீலனைக்காக இரண்டாவது முறை கூடியிருக்கிறது. சட்டசபைக் கட்டிடத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலேயே ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தக்கூடாதென்ற போலீஸ் கமிஷனர் உத்தரவோடு சபை நடவடிக்கைகள் தொடங்கியிருக்கின்றன. வரவு செலவுத் திட்டப் பரிசீலனைக்கு முன்பே, யாரும் எதிர்பாராத ஒரு கட்டத்தை ஏற்படுத்திவிட்டார் ஆச்சாரியார். தம்மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் சபையில் நிறைவேறிய பின்புதான் மற்ற நடவடிக்கைகள் என்று பெரிய அணுகுண்டைத் தூக்கிப்போட்டுவிட்டார். அருப்புக் கோட்டைத் தேர்தல் முடிவு தம் மந்திரி சபை நீடிப்பதற்கு விரோத மானதென்றும், எனவே சபையின் ஆதரவு பரிபூரணமாகத் தெரிந்தாலொழியத் தாம் பதவியில் இருக்கமுடியாதென்றும் அவர் அறிக்கை தந்துவிட்டார். சட்டசபை நான்கு நாள் விவாதித்தது. தீர்மானம் இருநூறு பேர் ஆதரவளிக்க, நூற்றைம்பது பேர் எதிர்க்க நிறைவேறியது. இவ்வாறு நம்பிக்கைத் தீர்மானக் கூத்து ஒருவாறு நடந்து முடிந்திருக்கிறது.

அருப்புக்கோட்டைத் தேர்தல் முடிவு தம் மந்திரிசபைக்கு விரோதமானதென்று நினைத்தால் ஆச்சாரியார் தம் ராஜினாமாவைச் சமர்ப்பித்திருப்பதுதான் முறை. கோவில்பட்டிப் பேச்சில் அவர் விடுத்த கோரிக்கையின் தொனிப்படி பார்த்தால் அதுதான் பொருத்தமாகும். அதுமட்டுமல்ல. காகினாடாத், தொகுதியிலும் காங்கிரஸ் அபேட்சகர் படுதோல்வியடைந்திருக்கிறார். அது சென்னை சட்டசபைக்கே நடந்த தேர்தலாகும். அத் தேர்தல் முடிவை மதிப்பதானாலும் ஆச்சாரியார் வேறுவிதமாகத்தான் நடந்துகொண்டிருக்க வேண்டும். கோயம்புத்தூர் உபதேர்தலில் மட்டுமே காங்கிரஸ் வெற்றிபெற்றது. அங்கும் போட்டியின்றிக்

காங்கிரஸ் முந்திப் பெற்றிருந்த ஸ்தானத்தைப் பலத்த போட்டி மூலமே பெற முடிந்தது. இம் மூன்று தேர்தல் முடிவுகளும் ஆச்சாரியார் மந்திரிசபைக்கு மக்களிடமுள்ள ஆதரவைக் காட்டுவதாக இல்லை. இந்நிலையில் ஆச்சாரியார் தோல்விகளைப் பூசிமெழுகக் கையாண்ட வழிதான் இந்நம்பிக்கைத் தீர்மானம். சட்டசபையில் காங்கிரஸ் கட்சிக்குப் போதிய ஆதரவிருக்கிறதென்பது சபாநாயகர் தேர்தலின்போதே தெளிவாகி விட்டது. அப்படியிருக்க மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள அவசியமே இல்லை. தேர்தல் தோல்விகளை மறைக்கவும், தம் எதிர்காலத் திட்டங்களைத் தடங்கலின்றிக் கொண்டு செல்லவுமே இத்தீர்மானத்தை ஆச்சாரியார் பயன்படுத்தியிருக்கிறார்; தற்சமயம் அவர் வெற்றி பெற்றிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும்.

தங்கள் தேர்தல் கொள்கைகளை மறந்து காங்கிரஸுக்கு வாக்களித்த கிருஷிக் லோக் கட்சியினரும், முஸ்லிம் லீக் கட்சியினரும், ஜஸ்டிஸ் கட்சியினரும், சில சுயேச்சையாளரும்தான் காங்கிரஸின் இவ்வெற்றிக்குக் காரணமாவர். இல்லாவிட்டால் எவ்வாறு காங்கிரஸ் மந்திரிசபைக்கு ஆதரவாக 200 வாக்குகள் கிடைக்கமுடியும்? மக்களுக்குத் துரோகம் செய்யத் துணிந்தவர்கள் சிலர் இருப்பதாலேயே ஆச்சாரியார் தம் சாகஸங்களைச் செய்யமுடிகிறது; எலும்புத் துண்டுகளைக் காட்டிக் கட்சிக்குப் பலம் திரட்ட முடிகிறது! இந்நிலையை மக்கள் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். துரோகிகளை மக்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள்.

ஆச்சாரியார் மந்திரிசபை நீடித்து நிற்க என்ன தகுதி பெற்றிருக்கிறது என்று ஆராயும் கடமை சட்டசபை உறுப்பினர்களைத் தவிர மக்களனைவரையுமே சார்ந்திருக்கிறது. கவர்னரின் உதவியால் நியமனம் பெற்றுப் பதவி யேற்றவர் ஆச்சாரியார்; பதவி யேற்கும்வரை காங்கிரஸுக்கு மெஜாரிட்டியில்லை என்பது உலகறிந்த விஷயம். பதவி பெற்றபின் மெஜாரிட்டி திரட்டமுடியுமென்று அவர்கள் நம்பியதிலும் ஆச்சரியமில்லை. எனவேதான் ஐக்கிய முன்னணியை மறித்து, காங்கிரஸ் பதவிக்கு ஏற்றப்பட்டது. ஆச்சாரியார் மெஜாரிட்டி ஆதரவில் நம்பிக்கையுள்ளவராக இருந்தால், அந்நிலையில் பதவி ஏற்றிருக்கக் கூடாது. அதை விடுத்து உறுதிப்படுத்தப்பட்ட ஆதரவை இன்று விளம்பரப்படுத்த முன்வந்தது அதிசயம்தான்!

ஆச்சாரியார் மந்திரிசபைக்கு முந்திய காங்கிரஸ் மந்திரி சபைகளைவிட வசதி அதிகம்தான்! பத்திரிகைகளின் ஒத்துழைப்பு அவருடைய பெரும் பலமாகும். அகில இந்திய அடிப்படையில் அவருக்குள்ள செல்வாக்குக் காரணமாக மத்திய சர்க்கார்

சென்னை சர்க்காரைச் சற்று விரைந்து கவனிக்கின்றனவென்பதும் உண்மைதான். மேலும் அவரை மகான் என்றும், தீர்க்கதரிசி என்றும் போற்றிப் புகழ ஏடுகளும் ஆட்களும் இங்கே ஏராளம். அவருடைய கெட்டிக்காரத்தனத்தைப் புகழாதவர் யாருமே இல்லை. இந்நிலையில் அவர் நடத்தும் ஆட்சிக்கு ஆதரவு கிடைப்பது எளிதுதான். என்றாலும் காங்கிரஸ் பொதுத்தேர்தலில் அடைந்த தோல்வியை ஆச்சாரியார் ஒரு நொடியில் தீர்த்துக் கட்டிவிட முடியுமா? காங்கிரஸ் மந்திரி சபைக்குள்ளகெட்டபெயர் இந்த மந்திரி சபைக்கும் ஒட்டுவது இயற்கைதானே? அதையெல்லாம் போக்கத்தான் இந் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆனால், சென்னை ராஜ்ய மக்கள் ஏமாந்தவர்களல்ல. வேடிக்கையான பேச்சு, விகடங்கள், அபார மூளை இவற்றை நன்கு அனுபவிக்கும் திறம் அவர்களுக்குண்டு. ஆனால் 'வயிறு நிறையச் சாப்பாடு போடு முதலில்' என்று கேட்கத் துணிவு பிறந்துவிட்டது அவர்களுக்கு. கடவுளை நம்ப அவர்கள் தயாராயிருக்கிறார்கள்—ஒரு கடவுளை மட்டுமல்ல, எத்தனை கடவுளை வேண்டுமானாலும், ஆனால் அக் கடவுள் நம்பிக்கை அவர்கள் வயிற்றிலடிக்கக் கூடாது; அவர்கள் முன்னேற்றத்தைத் தடைசெய்யக்கூடாது. ஆச்சாரியார் மக்கள் துயர் நீக்க என்ன திட்டம் வைத்திருக்கிறார்? உணவுப் பொருள்களின் மீதிருந்தகட்டுப்பாடுகளை நீக்கினார்; அது உருப்படியான செயல்தான். அதுபோல உருப்படாத மதுவிலக்கை ஏன் நீடித்து அழகுபார்க்கிறார்? தாம் தொடங்கி வைத்த அரும் பணியாயிற்றே என்று யோசிக்கிறார் போலும். கர்மவீரருக்கு இத்தடைகள் எப்படிக் குறுக்கே நிற்க முடியும்? புது வரவு செலவுத் திட்டம் பல வரிகளை

## புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டி

நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக இப்போட்டிக்கு ஏராளமான சிறுகதைகள் வந்துள்ளன. மேலும் முடிவு தேதியைத் தள்ளிப் போடும்படியும் இன்னும் பலர் கலந்துகொள்ளச் சந்தர்ப்பமளிக்கும்படியும் நண்பர்கள் வற்புறுத்தியிருப்பதால், கதைகள் அனுப்பும்காலவரையறையை 30-9-52 வரை நீடித்திருக்கிறோம். இக்கால நீடிப்பைப் பயன்படுத்திக்கொண்டு மேலும் ஏராளமான புது எழுத்தாளர்கள் போட்டியில் பங்குகொள்வரென நம்புகிறோம்.

முடிவு தேதி: 30–9–52

விரித்து வைத்திருக்கிறது. பஸ் டிக்கட்மீது ஊமலுக்கு ஒரு தம்பிடி வரி. இந்த வரி நடுத்தர, ஏழை வகுப்பினரைத்தான் பாதிக்கும். பஸ் பிரயாணம், ரயில் பிரயாணத்தைவிடச் செலவு அதிகமாவது. அப்படியிருக்க இந்த வரியும் சேர்ந்து கொண்டால் தொல்லை வளர்ந்த மாதிரிதான்! வரவு செலவுத் திட்டம் சென்னை மக்களுக்குப் பெருந்த நன்மைகளை வழங்குவதாயில்லை. ஆனால் புது வரிகளை மட்டும் வழங்கியிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாகப் புதிதாகப் போடப்பட்ட வரிகளும், கூட்டப்பெற்ற வரிகளும் குறையுமா என்று மக்கள் எதிர்பார்த்திருக்கப் புது வரிகள் வந்தால் துயரம் எப்படித் தீரும்?

சட்டசபை இங்கிலேயில் ஆச்சாரியார் ஆட்சிக்குக் கொடி காட்டியிருக்கிறது. ஆச்சாரியாரின் எதேச்சாதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டிக்கும் எதிர்க்கட்சி நண்பர்களுக்கு நாடு கடமைப் பட்டிருக்கிறது. மக்கள் துயரங்களேயும் தொல்லைகளையும் சபையில் எதிரொலிக்கச் செய்யும் பெரும் பணியை ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் நன்கு ஆற்றி வருகிறார்கள். அப்பணியின் பயனுக நாடு பெறும் விழிப் புணர்ச்சி, அண்மையில் நிறைவேறிய நம்பிக்கைத் தீர்மானம் போன்ற கேலிக்கூத்துகளே இனி அறவே நடவாவண்ணம் செய்யுமென்பது திண்ணம்.

---

## தலைப்புப் பரிசு

10-6-52 இதழில் வெளிவந்த நிழற்படத் தலைப்புப் போட்டியில் பரிசுபெற்ற தலைப்பு:

**விபத்தே நில்! விழிப்போடு செல்!**

பரிசு பெற்றவர்:

மு. க கிருட்டினன், கடலூர்.

**பாராட்டுக்குரியவை:**

**வெண்குடைக்கீழ் சாலை மன்னன்**
சி. பி. சம்பத், சென்னை.

**நிழலில் நின்றும் நினைவில் சுழல்பவர்கள்**
சு. கோவிந்தராசன், சிதம்பரம்

**சட்டத்தின் காவலன் சந்தியில் நிற்பதேன்?**
த. ப. சுந்தரம், காட்டுப்பாடி.

**ஒருகுடை நிழலில் இருமுடி மன்னர்கள்**
எஸ். எம். நடராசன், திருக்காட்டுப்பள்ளி

# துரோகமும் கருணையும்

டர்பன் ச. மு. பிள்ளை

ஃவாகிங்ஹாவின் ஒரு சீன தளகர்த்தர். அவரது பிறந்ததினக் கொண்டாட்டத்தில் தேநீர் விருந்து நடந்துகொண்டிருந்தது. ஒரு மூலையில் சீன தளகர்த்தரின் அழகிய மனைவியும், ஆங்கில கனவான் ஜெனரல் ராபர்ட்ஸும் பேசிக்கொண்டிருந்தனர். தளகர்த்தரது அழகிய மனைவியின் முகம் ஜெனரலின் பழைய நினைவுகளை நினைவூட்டியது. அவர் கண்கள் கலங்கின.

"உங்களுக்கு இவ்வளவு மனக் கலக்கத்தை உண்டாக்கிய அந்தப் பழங் கதையை நான் கேட்க மிகவும் ஆவலுள்ளவளாக இருக்கிறேன்" என்றாள் அப் பெண்மணி.

"ஆம்! அது ஒரு துயரமான சம்பவமே. இருந்தாலும் அதைப் பற்றி இதுவரையில் நான் யாரிடமும் கூறினதில்லை" என்று தனது கதையைத் தொடங்கினார் ராபர்ட்ஸ் துரை.

"சுமார் இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நான் சைனாவில் ஒரு சாதாண சிப்பாயாக இருந்தேன். அப்பொழுது சீன மொழி அறிந்த எங்களுக்கு நல்ல பதவியும் பொருளும் கிடைத்தன. எனக்கும் எனது மேல் அதிகாரிகள் அம்மொழியைக் கற்கும் பொருட்டு ஆறுமாதம் லீவு கொடுத்தார்கள். அந்த மொழியைக் கற்கச் சீனச் சக்கரவர்த்தியின் மைத்துனராகிய சேனாதிபதி ஹுவாங்ஹியிடம் ஒரு மாணவனாகப் போய்ச் சேர்ந்தேன், பெரியதொரு சிபார்சின் துணைகொண்டு."

"யார்? சேனாதிபதி ஹுவாங்ஹியா?" என்று சற்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ஜெனரலின் முன் வீற்றிருந்த அம்மங்கை.

"ஆம்; ஹுவாங்ஹிதான். வயதானவர். சேனாதிபதியாகிய அவர் சீன மொழி கற்பிப்பதில் கைதேர்ந்தவர். நான் ஐந்தே மாதத்தில் நன்றாக உங்கள் மொழியை எழுதவும், படிக்கவும் கற்றுக்கொண்டேன். ஹுவாங்ஹியுக்கு நைசாங்மா என்ற ஒரு அழகிய மனைவி; இருபது வயதே முடியப்பெற்ற அவள் அழகில் ரதியைப்போல் இருந்தாள். எங்கள் இருவருக்கும் பரஸ்பரம் அன்பு உண்டாகி, அது நாளடைவில் காதலாக மாறியது. நாங்கள் இருவரும் சேனாதிபதி இல்லாத சமயங்களில் பேசவும் கூடிக் குலவவும் ஆரம்பித்தோம், முடிவில் எப்படியாவது இருவரும் எங்காவது ஓடிவிடுவது என்று தீர்மானித்தோம்.

"நாங்கள் எதிர்பார்த்த சந்தர்ப்பமும் வாய்த்தது. தான் ஏதோ அலுவலாக வடக்கேயுள்ள 'கார்சீவா' கிராமத்திற்குச் செல்லவேண்டுமென்றும், திரும்ப இன்னும் நான்கு நாள் ஆகுமென்றும் சேனாதிபதி சொல்லிச் சென்றார்.

"இதைத்தான் நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். அவர் கிளம்பிய சிறு நாழிகைக்கெல்லாம் நாங்களும் புறப்பட்டோம். தென் திசையை நோக்கி 'காண்டன்' நகரம் சென்றுவிடுவது என்றும் அங்கிருந்து இந்தியா செல்வது எனவும் தீர்மானித்தோம்.

"சுமார் ஆறுமணி நேரம் கடும் வெய்யிலில் பிரயாணம் செய்து 'கடுபாவோசி' கிராமத்தை அடைந்தோம். இன்னும் காண்டன் நகரம் பத்து மைல்களேயுள்ளது; அங்கு சென்றுவிட்டால் எங்களை ஹுவாங்ஹி கண்டுபிடிப்பது மிகவும் சிரமம். வெய்யிலில் வழிநடந்த களைப்பும்,

நாங்கள் ஓடிவிட்டது சேனாதிபதிக்குத் தெரிந்துவிட்டிருக்குமோ என்ற பயமும் எங்களை வாட்ட, இரவு ஓய்வு பெறும் பொருட்டு அக்கிராமத்தின் விடுதியை நோக்கி நடந்தோம். எங்களை விடுதியின் சொந்தக்காரன் வரவேற்று, எங்களது பெட்டிகளை ஒரு அறையில் கொண்டு வைத்துச் சாப்பாட்டுக் கூடத்திற்கு அழைத்துச்சென்றான்....”

இவ்விடத்தில் தனது கதையைச் சற்று நிறுத்தித் தன் எதிரில் உள்ள கன்னிகையின் முகத்தை நோக்கினார் ஜெனரல் ராபர்ட்ஸ். அவளது கருவிழிகளில் நீர் கலங்குவதை அவர் காணாமலில்லை.

“கூடத்திற்குள் நுழைந்ததும் ‘ஹா’ என்ற சத்தத்துடன் கீழே விழுந்து மூர்ச்சையானாள் ஸைசாங்மா. எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அங்கு நான் கண்ட காட்சி...தன் ஆட்களுடன் சேனாதிபதி ஹுவாங்ஹி உணவு அருந்திக் கொண்டிருந்தார். எங்களையும் பார்த்துவிட்டார்.

“தனது மனைவியைக் கண்டதும் அவருக்குண்டான கோபம் என்னைக் கண்டதும் பேய்ச் சிரிப்பாக மாறியது. இவளை அந்த அறைக்குக் கொண்டு செல்லுங்கள்’ என்று பணியாளனிடம் சொல்லிவிட்டு என்னைப் பார்த்து “வாருங்கள், ராபர்ட்ஸ் துரையே! உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்’ என்றார்.

“எனக்கு என்ன செய்வதென்று ஒன்றும் புலப்படவில்லை. இப்படிக் கையும் களவுமாக அகப்பட்டுக்கொண்டோமே என்ற பயமும், துரோகம் செய்தோமே என்ற வருத்தமும், சேனாதிபதி என்ன செய்வாரோ என்ற நடுக்கமும் என்னை வாட்டத் தொடங்கின.”

“கோபம் கொந்தளிக்க என்னைப் பார்த்து, ‘நீங்கள் எங்கு போவதாக உத்தேசமோ?’ என்று அலறினார் சேனாதிபதி.

“‘நடுவில் ஒரு தடங்கலும் இல்லாவிட்டால் நேரே இந்தியாவுக்கே சென்றிருப்பேன்’ என்றேன் சற்று தைரியமாகவே.

“‘ஓஹோ...! உங்கள் திருட்டுக் காதல் எனக்குத் தெரியாமலில்லை. நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைக் காணவே நான் வடக்குப் பக்கம் செல்வதாகப் பொய் சொல்லி இங்கு வந்தேன். நான் நினைத்தது நடந்திருக்கிறது...’

“‘எய், ராபர்ட்ஸ்! இப்பொழுது நான் நினைத்தால் உன்னை இங்கேயே இரு துண்டங்களாக வெட்டிவிடலாம்; என்னைக் கேட்பாரில்லை. ஆனால் என்னை வஞ்சித்துவிட்ட அந்தப் பாபி—என் காதலி உன்னுடன் வர விரும்பினால் நீங்கள் இருவரும் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்” என்று சொல்லிக் கொண்டே, ஒரே தாவில் எனது காதலியை அவரது ஆட்கள் தூக்கிச் சென்ற அந்த அறைக்குச் சென்றார்.

“எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. சித்தப்பிரமை கொண்ட



வனைப்போல அங்கேயே நின்றேன். "ஆ!" என்ற எனது காதலியின் கூக்குரல் எனக்குத் தன்னுணர்வைக் கொணர்ந்தது. மறுகணம் என் முன் சேனாதிபதி தோன்றினார்.

" 'ஏ, ஆங்கில இளைஞனே! உன்னுடன் வர அவளும் விரும்புகிறாள் ஆகையால் நீங்கள் இருவரும் தடையின்றிச் செல்லலாம்,' என்று சொல்லித் தனது ஆட்களுடன் வெளியே சென்றார் சேனாதிபதி.

"துள்ளிக் குதித்தேன் மகிழ்ச்சியினால். சேனாதிபதியை என் மனமார வாழ்த்தினேன்.

"இனி என் காதலியுடன் ஆனந்தமாக இன்பவாழ்க்கைத் தொடங்கலாமன்றோ...? ஆம்? இனி என்–அல்ல; எங்கள் இருவரது தாம்பத்ய வாழ்வே எழில் நிறைந்த சொர்க்கம்போலத்தான், ஒன்றுபட்ட இதயம் இரண்டும் ஒன்றிவிட்ட காரணத்தால். ஆஹா...! அவசர அவரமாக உள்ளே நுழைந்தேன் எனது காதலியைத் தேடி. அங்கு நைசாங்மா தலை குப்புறக் கிடந்தாள்; எனது இரு கைகளாலும் வாரியெடுத்தேன். தனது கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அவள் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். அவள் கைகளை விலக்கி முகத்தை நோக்கினேன். அவளது இரு கண்களினின்றும் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. என்னுடன் தனது மனைவியை விட்டுச் சென்ற சேனாபதி, தன்னுடன் அவள் இரு கண் விழிகளையும் எடுத்துச்சென்றுவிட்டார். ஐயோ!..............."
என்று தனது கதையை முடித்தார் ஜெனரல் ராபர்ட்ஸ். அவர் முன்னிருந்த சீன தளகர்த்தர் கவாகிங் ஹுாவின் மனைவியின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்துகொண்டிருந்தது. அதைத் துடைத்துக்கொண்டே அவள், "பின் என்ன நடந்தது, ஜெனரல்?" என்றாள்.

## 25–6–52 இதழ்

'பொன்னி' 25-6-52 இதழ் வெளிவரவில்லை—இச் செய்தியைச் சந்தாதார்களுக்கும் வாசகர்களுக்கும் ஏஜண்டுகளுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். அச்சியந்திரத்தில் பழுது ஏற்பட்டதால் இதழ் வெளிவருவது தடைப்பட்டுவிட்டது. நண்பர்கள் பொறுத்தருளவேண்டுகிறோம்.

"பின் நைசாங்மா விஷம் அருந்தி இறந்தாள்" என்றார் ராபர்ட்ஸ்.

இதுவரை அவருக்கு எதிரில் வருத்தத்துடன் வீற்றிருந்த அம் மங்கையின் கண்களில் இப்பொழுது கோபத் தணல் வீசியது.

"ஆனால், ஜெனரல் துரையே, நான் இதே கதையை இதற்கு முன் கேட்டிருக்கிறேன். அதன் முடிவு வேறானதாயிற்றே...!" என்றாள் அவள்.

இதைக் கேட்ட ஜெனரல் திடுக்கிட்டார். "என்ன அந்த முடிவு...?"

"அக்கள்வனும் துரோகியுமாகிய அந்த ஆங்கிலேயன் பழுதடைந்த மாணிக்கமாகிய நைசாங்மாவை அவ்விடமே விட்டுவிட்டு ஓடிவிட்டான். பின், சேனாதிபதி ஹுவாங்ஹியே அவளைத் தனது மனைவியாகச் சேர்த்துக்கொண்டார்" என்றாள்.

ஜெனரல் ராபர்ட்ஸின் மதி கலங்கியது! "உனக்கு இக்கதையைச் சொன்னது யார்?" என்று அவரிடமிருந்து கேள்வி பிறந்தது.

"யாரா? ஏ, துரோகி! நான்தான் அக்குருட்டு நைசாங்மாவுக்கும் சேனாதிபதி ஹுவாங்ஹியிக்கும் பிறந்தபெண்" என்றாள் அப் பெண்மணி!

# ராசா

மா. ரங்கநாதன்

அன்றிரவு, அரண்மனையிலே ராசா தூங்கவில்லை. தூங்கமுடியாத அளவு நெஞ்சை அழுத்திக்கொண்டிருந்தது பாரம். தலை சாய்த்துக்கொண்டிருந்த அச்சாபீஸின் வெளி வராந்தாவில் அவனைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை. பேச்சுத்துணைக்குக்கூட யாருமே இல்லை. இருந்தாலும் அவர்களுடன் அவன் பேசுவதில்லை. பேச்சுக்குப் பக்கத்திலிருக்கும் வேப்பமரந்தான் துணை. தூக்கம் வரும் வரையிலும் கதை சொல்லும்; விடுகதை போடும் அந்த மரம்!

காலையிலே, கடைக்காரன் வந்து இரண்டு உதையும் ஒரு குட்டும் கொடுத்து, 'எழுந்திருலே' என்று அதட்டிய பிறகுதான் ராசா கண்மலருவான். சில சமயம் காதைப் பிடித்துத் தூக்கி எழ வைப்பதுமுண்டு.

இரவு ஆள் நடமாட்டம் குறைந்துவிட்டது. அவன் தூங்க முயலவில்லை. "நாளைக்குப் படுக்கை இவ்விடமில்லை" என்பதற்குமேலாக அவன் மூளையைத்தாக்க எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றனவே!

அவன் நினைப்புக்கு முடிவே இல்லை. கூடச்சேர்ந்த பையன்களின் சொல்லைக் கேட்டு, 'இனி மேல் தியேட்டர் பக்கமே வரக்கூடா'தென்று சொல்லிவிட்டார், தியேட்டர் மானேஜர். போர்டு வண்டி தள்ளும் வேலை போய்விட்டதே என்ற கவலை கிடையாது அவனுக்கு. ஆனால்...!

தனக்கு ஒரு நல்ல தினம் என்று ஒன்று உண்டென்றால், அது தன் தகப்பன் இறந்த நாள்தான் என்று ராசா எண்ணியது உண்டு. தான் மட்டும் அருகிலிருக்க, தகப்பன் திறந்த வாயை மூடாமலே உயிரைவிட இருவரும் அந்த 'வெயிட்டிங் ரூமி'ல் தங்கி இருந்ததை நினைத்துப் பார்ப்பான் ராசா.

பிறந்ததுமே 'ராசா' என்றழைத்த தகப்பன் போய்விட்டதைப் பற்றி அப்போது கொஞ்சமும் எண்ண முடியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே ஏழு வயது ராசா கையால் உதட்டைப் பிதுக்கியவண்ணம் நின்றதைச் சர்க்கார் சிப்பந்தி ஒருவர் கவனித்து, முனிசிபாலிட்டிக்குத் தகவல்கூறி ஆட்கள் வந்து பிரேதத்தை எடுத்துச்செல்லும் சமயம் ராசாவைச் சுண்டுவிரலுக்கும் முந்தின விரலால் பட்டும் படாததுமாய்த் தட்டி ஒரு ரூபாய் சில்லறையும் கொடுத்து அனுப்பினார்.

சுற்றி வைத்திருந்த துணிப் பொட்டலத்தை எடுத்துக்கொண்டு, நிம்மதியாக வெளியே செல்லும்போது, ஒரு ரூபாய் சில்லறையின் இன்பம் அவனைச் சூழ்ந்துகொண்டிருந்தது.

தன்னைப்பற்றி அவனுக்குக் கவலை இல்லை. சுமை தூக்கப் பயிற்றுவித்திருந்தான் அவன் தகப்பன். நல்ல திறமை பெற்ற அவன் தன்னைப்பற்றிக் கொஞ்சமும் விசாரப்படவேண்டியதில்லை அல்லவா? அவனைப் பொறுத்த மட்டில் அவன் ராசா. பஸ் ஸ்டாண்டிலே போர்ட்டர் வேலை கொஞ்சநாள், ஐஸ்கிரீம் விற்றது கொஞ்சநாள்; இப்படி ஒவ்வொரு வேலையிலும் இருந்து மாறி மாறி வருடமும் ஓடிக்கொண்டிருந்தது. தான் முன்னை விட மாறி இருக்கிறோமா என்பது அவனுக்குப் புரியவில்லை.

இதெல்லாம் எப்போதோ நடந்தது.

★

கனவிலே புகுந்து சென்ற ராசா கண் விழித்துக்கொண்டான். போர்த்திக்கொண்டதிலிருந்து இம்மியளவுகூட மாற்ற மடையாமலிருந்த வேட்டியைச் சாவதானமாக அரையில் இறுக்கினான்.

நேற்றிலிருந்து கூப்பாடு போடத்தொடங்கியிருந்த அவன் வயிறு கொஞ்சநேரம் அமைதியாக இருந்து தன் பிரலாபத்தை ஆரம்பித்தது. கைகளை முழங்கால்களில் கட்டிக்கொண்டு, கண்களைப் பக்க வாட்டாகச் சுழித்துச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

கதாநாயகனும், கதாநாயகியும் மோன நிலையிலிருந்த ஒரு படத்தைத் தள்ளிக்கொண்டு சுப்பன், கோட்டீஸ் கொடுத்துக்கொண்டு சென்றான். மணி, தெம்மாங்கு முனியன் எல்லோருக்கும் நடுவிலே நீலி...

'நீலி!'

ஒரு தடவை நின்ற இடத்திலேயே திரும்பினான் ராசா. 'நீலி' என்று அவனும் முணுமுணுத்திருக்க வேண்டும்.

"அவ—நீலி தான்—சவம்"

அவளைத் தாண்டி, குழாயைத் தாண்டி, அந்தப் பக்கத்தையே தாண்டி அவர்கள் படவண்டியை தள்ளிக்கொண்டு போனார்கள்.

நிலைகுத்த நின்ற சண் தரையை நோக்கியது ராசாவுக்கு. ஒரு வருடமாய் அந்த நீலியை அவனுக்குத் தெரியும். அவளும் அவனும் தான் எங்கு போனாலும்!

நேற்றிலிருந்து அடிக்கடி தலை சுற்றிக்கொண்டே வந்தது. நடக்க முடியாமல் கூட இருந்தது. பஸ் ஸ்டாண்டுக்கு அருகில் போகவே பிடிக்கவில்லை. உலகமே வெறுத்திருந்தது அவனுக்கு.

அலறிக் கொண்டிருக்கும் வயிறுக்கு என்ன சொல்வது என்பதுபோலச் சுற்றுமுற்றும் பார்த்தான் ராசா.

"இங்கே வாடா! இந்தா"

அலட்சியம்செய்த அழைப்பை இப்போது ஏற்றுக்கொண்டான்.

பழக்கூடையைத் தூக்கிக்கொண்டு ஒரு பர்லாங்கு தூரமுள்ள கடைக்கு போகும்போது வயிறு அமைதியாகத்தான் இருந்தது.

ஒரு அணாக் கூலியை வாங்கிக்கொண்டான். அங்கிருந்து திரும்பவும்நடந்த நடையில் ஒரு

வேகம்; உற்சாகமற்ற தனி வேகம்.

கிருஷ்ணபகவானுக்கு எதிரேயுள்ள கிழவி அவனது முழுப் பார்வையில் தென்பட்டாள்.

காலை உணவை— பொரி கடலையை வாங்கி வயிற்றுக்குள்ளே தள்ளினான்.

'இனிமேலே'—ராசா முனகினான்.

முனகலோடு நடை. எல்லாவற்றிற்கும் மேலாக நீலி.

காலை கனகச்சிதமாக மத்தியான வேளையை நோக்கிச் சென்றது.

★

சுருட்டி வைக்கப்பட்டிருந்த அந்தப் பொட்டலத்தை, அச்சாபீஸ் படிக்கட்டிலிருந்து வெளியே எடுத்தான் ராசா.

"கவலை ஒண்ணுமினி இருக்காது.நான் நாசமாப்போறேன்.-" பொலபொல வெனக் கண்ணீர் சொரிந்தான் ராசா.

துணி முடிப்பின் ஆழத்திலே வாழ்ந்துகொண்டிருந்தது ஒரு முழு ரூபாயும், சோவிக் குண்டு ஒன்றும். ரூபாயைக் கையிலெடுத்தான் ராசா. எத்தனையோ பட்டினி சமயத்திலேயும் அந்த ரூபாய் அவனை விட்டு நழுவி விடவில்லை அதை அவன் கையிலெடுத்து விட்டான். இப்போது பசியே இல்லை. வயிறு மந்தித்துப் போய்விட்டது.

மன வேதனையில் துடித்தான். வெளியிட முடியாத கோபத்தையும், ஆத்திரத்தையும் யாரிடம் காட்ட முடியும்? அன்பிற்கு ஏங்கியது அந்த இளம்உள்ளம். கூட இருந்த சோவிக்குண்டும், ரூபாயும்தான் தகப்பனாரின் ஆஸ்தி. அவை இரண்டும் எத்தனையோ தடவைகள் கண்ணீரால் கழுவப்பட்டிருக்கின்றன.

மாலையில் குமிழ்விளக்குகளால் அணிவித்திருந்த ஹோட்டலில் அந்த ராசா எழுந்தருளினார். உன்மத்தம் பிடித்தவன் மாதிரி நின்ற அவனைக் கவனித்து, ஹோட்டலுக்கு வெளியே நின்ற வெள்ளை நாய் குரைத்தது.

"என்ன வேணும்"

வாயை மூடிமூடித் திறந்தான் ராசா.

"சொல்றயா? வெளியே போறயா? என்னடா, விளையாடுறயா?"

"ரெண்டு தோசையும் காப்பியும்..."

"ஐயோ! இதுக்கா இவ்வளவு நேரம், ராஸ்கல்"

ஆகாரம் வருவதற்குள் ரூபாய் மூன்று முறை முத்தமிடப்பட்டது.

"என்னடா முழிக்கிறே. இந்தா!"

எட்ட நின்று கொடுத்த இலைப் பொட்டலத்தைத் தெற்கு மூலையில் இருந்துகொண்டு உள்ளே தள்ளினான்.

வயறு வலித்தது. படபட வென விழுங்கியதில் விக்கல்.

ரூபாயைத் தூக்கிக் கொடுப்பதற்கு எங்கிருந்து தைரியம் வந்ததோ? மூன்றடி தூரம்

தள்ளி நின்று மேசைமேல் ரூபாயை வைத்தான்.

"ஊம்"

ரூபாய் வாங்கப்பட்டது. அது செல்லாத ரூபாய்.

"எத்தனை நாளா இந்த வேலே! வேறே ரூபாய் எடு. களவாணிப் பயலே!" சீறினர் முதலாளி.

பலன், ராசாவுக்கு அடியும் உதையும்.

ராசா மூர்ச்சையடையவில்லை.

★

மாலே வந்தபொழுது, நகரமும் அதன் நாகரிகமும் விழித்துக் கொண்டன.

பஸ்ஸிற்குக் காத்து நிற்கும். ஜனங்களுக்காக அங்கே ஒரு 'வெயிட்டிங் ரூம்'. காதல் முதல் களவு வரை நடைபெறும் அந்த இடத்திலே, ராசாவுக்கும் பங்கு இருந்திருக்கிறது.

போராட்டத்தைத் தாங்க முடியாமல் அலறுமல் அலறினான் ராசா. செல்லாத ரூபாயையும் முதுகிலுள்ள வீக்கத்தையும் தடவினன்.

கோலிக் குண்டையும் ரூபாயையும் தனியாக முத்தமிட்டான்.

கண்களில் கண்ணீர் புரண்டது.

'அன்பு காட்ட வேண்டாம், அலட்சியம் பண்ணுமலிருக்கக் கூடாதா?' என்று அவன் எண்ணி இருக்கவேண்டும் என்பதை அவன் முகம் சொல்லுகிறதே!

'டக்'–'டக்' என்ற பூட்ஸ் ஒலியுடன் வந்து அவனருகில் நின்ற 'வெயிட்டிங் ரூம்' அதிகாரி "ம்...ம்...எத்தனை தடவை சொல்லியாச்சு, இங்கே வாராதேன்னு...ம்...எழுந்திருடா..ம்." என்றார்.

அதற்கு மேல் அவர் பேசிக் கொண்டிருக்கவில்லை. வயிற்றில் 'டங்' என்று விழுந்த உதை சாவகாசமாகப் பேசிச் சிரித்தது.

ஒரு கணம் துடித்து விழுந்தான் ராசா.

வயறு மேலெழுந்து பொங்கியது. அவன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினர் அவர்.

அருகிலுள்ள தூணை ஒரு கையால் பிடித்துக்கொண்டான். மற்றொரு கை, விண் விண் என்று தெறித்துக்கொண்டிருந்த வயிற்றை அமுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது.

மெதுவாகத் தூணை விட்டு வெளியே வந்தான். கையிலுள்ள ரூபாயையும் கோலிக்குண்டையும் அவன் கண்கள் விழுங்கிக் கொண்டிருந்தன.

★

இரண்டு தினங்கள் கழித்து, யாருமே போகாத அந்தக் கள்ளர் குளத்தின் மூலேயிலே வயிறும், கன்னமும் ஊதி வீங்கிக் கிடந்த அந்தப் பையனின் சடலத்தை யாருமே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

பிரேத விசாரணையின்போது, அவன் வயிற்றில் ஒரு கோலிக் குண்டும் ஆகாரக் குழாயின் நடுவே நசுங்கின முழுரூபாயும் இருந்ததாக டாக்டர் கூறினர்!

# ஏமாற்றம்

பாலா

எதிர்பார்த்தவண்ணம் தபால்காரன் கார்டு ஒன்றை நீட்டிவிட்டுச் சென்றதும், மணிக்கு ஆனந்தம் நிலைகொள்ளவில்லை.

ஓடிப்போய்த் தன் தந்தையிடம் விஷயத்தைச் சொல்லி, அதற்கு அத்தாட்சிபோல பாலு புதுடில்லியிலிருந்து எழுதிய கடிதத்தையும் தன் தகப்பனாரிடம் சமர்ப்பித்தான். கடிதத்தைப் படித்ததும் முதலியாருக்குக் குதூகலம் அத்துமீறியது.

"அன்புள்ள மணி,

இங்கே நான் வேலைபார்க்கும் ஆபீசில் 'கிளார்க்' வேலைக்கு ஒரு 'வாகன்ஸி' இருக்கிறது. சம்பளம் குறைந்தது நூற்றைம்பதாகிலும் கிடைக்கும். இந்தக் கடிதத்தைத் தந்திக்கு மேலாகப் பாவித்து உடனே புறப்படு.

பாலு"

புது டில்லிக்குத் தன் மைந்தனை ரூபாய் நூறுடன் அனுப்பி வைத்து வாரங்கள் இரண்டு சென்றபின், திருப்பி வந்த மணியை ஒருமுறை ஏற இறங்கப் பார்வையிட்ட முதலியாருக்குப் பையன் போன காரியம் காய் என்பது புலனாகிவிட்டது. தான் அங்கு போவதற்குள் இடம் பூர்த்தியாகிவிட்டதாகச் சொல்லி, அத்துடன் கொடுத்தனுப்பிய பச்சைநோட்டு ஒன்றுக்கு, 'பட்ஜெட்'டைப் பணிவுடன் நீட்டினான் மணி.

"ஹூம், நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" என்று அங்கலாய்த்துக் கொண்ட முதலியார் எழுதுவதற்கு மணியின் சட்டைப் பையிலிருந்து பேனாவை எடுத்தார். பேனாவுடன் அதில் செருகப்பட்டிருந்த ஒரு கார்டும் அவர் கைக்குள் அடங்கியது.

"அருமை பாலு,

நீ 'புதுடில்லிக்குப் போய் மாதங்கள் மூன்று கடந்துவிட்டன. அங்குள்ளவற்றையெல்லாம் உன்னுடன் சேர்ந்து கண்டு மகிழத் துடிக்கிறது என் நெஞ்சம். அங்கு எனக்கு ஒரு வேலை காலியிருப்பதாகவும், அது கட்டாயம் கிடைக்குமென்றும் உடனே ஒரு கார்டு போடு. அதை என் அப்பாவிடம் காட்டி எப்படியும் செலவுக்கு ரூபாய் நூறு வாங்கிக் கொண்டு புறப்படுகிறேன். அப்புறம் நம் பாடு ஒரே 'ஜாலிஹா' தான்! பிறகு அப்பாவிடம் தப்பித்துக்கொள்ள இதுபோல ஒரு யுக்தி இந்த அருமையான மூளையில் முளைவிடாமலா போய் விடும்!

மணி."

# சம்மதம்



சுரதா

ஆண் : நிமிர்ந்த பம்பரம் போலே—யானை
நெற்றியின் மேடு போலே—மலை பாராய்!

பெண் : ஆகாயம் கட்டிய கொட்டகையோ மலை—கண்ணா?

ஆண் : அசைகின்ற பூமியின் கொப்புளந்தான் மலை—கண்ணே

ஆண் : பாம்பின் சட்டையைப் போலே—வெடித்த
பட்டையில் ஊற்றிய பால்போலே—அருவி பாராய்!

பெண் : பெண்கள் உடுத்தும் மேல் ஆடை தான் இப்படி ஆச்சோ

ஆண் : தண்ணீர்க்கும் வால் உண்டு என்பதற் (கு) இது சாட்சி.

ஆண் : மரகதக் கம்பளம் மேலே—மயில்
இறகுகள் நிற்பது போலே—தோட்டம் பாராய்!

பெண் : காதலரால் இந்தத் தோட்டம் கசங்காதோ—கண்ணா?

ஆண் : குளிர்ந்த பனித்துளியாலே கல் உடையுமா—கண்ணே!

ஆண் : எறும்பு ஏந்திய பொரி போலே—சோழி
இரண்டு சேர்ந்தது போலே—அரும்பு பாராய்!

பெண் : இந்த அரும்புக் (கு) எப்போது கல்யாணம் ஆகும்?

ஆண் : இதழ்கள் மலர்ந்தபின் வண்டுக் (கு) இது தாரம் ஆகும்!

ஆண் : பகல் நிறக் கற்கண்டு போலே—பேசும்
நாக்கை வசமாக்கும் பழம் போலே—இனிப்பு தாராய்!

பெண் : முத்தம் ஒட்டினால் உதடு களைப்பாகும்—கண்ணா,

ஆண் : நித்திரை செய்வதால் விழிகள் வீணாகுமா கண்ணே!

# உயர்திரு அம்மையார்



வல்லிக்கண்ணன்

பூர்வாசிரமத்திலே அம்மணி அம்மாளாக விளங்கியவள் 'லோக நாயகி' எனவும், 'பூஜ்ய மாதா' என்றும், 'புனித அம்மை' என்றும், 'அன்னை' எனவும் பக்த கோடிகளால் அழைக்கப்படும் தகுதியைப் பெற்றது ஓர் தனிக்கதைதான்.

பஞ்சுப் பொதிபோல் நரைத்த தலையும், நன்கு பழுத்துக் கனிந்த மாம்பழம்போன்ற முகமும், புனித வெண் ஆடையும், அமைதியும் கம்பீரமும் கலந்த தோற்றமும் கொண்டு விளங்கும் உயர்திரு அம்மையாரை—மாஜி அம்மணி அம்மாளை இன்று அனைவரும் விழுந்து கும்பிடுகிறார்கள். 'பார்த்தால், சாட்சாத் பார்வதி தேவியே தவத்தை முடித்துவிட்டுத் திருஉலா வந்தது போல் தோன்றுகிறதே!' எனப் புகழ்கிறார்கள்.

இந்த உயர்நிலையை எய்துவதற்கு அம்மணி எவ்வளவோ கஷ்டநஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது என்பது அம்மையாரின் பக்த மணிகளுக்குக்கூடத் தெரியாது. அம்மையின் இன்றைய உயர்ந்த அந்தஸ்து திடீரென்று கிட்டிவிட்ட வரப்பிரசாதமல்ல. திட்டமிட்டு அவளாகவே அணு அணுவாகச் சம்பாதித்துக்கொண்ட தகுதிதான்!

அம்மையாருக்கு இப்போது நாற்பது வயது. பலரும் போற்றும் புனிதையாக வளரவேண்டும் என்ற ஆசை அம்மணியின் இருபத்தைந்தாவது வயதிலேயே பற்றிக்கொண்டது. காரணம் எதுவாகவு மிருக்கலாம். தான் சொல்லுகிறபடி பெரும்பலரை ஆடவைத்துத் தனக்குத் தனிப்புகழும் பணமும் திரட்ட வேண்டும் என்கிற அடிப்படை நோக்கமும் அவளுக்கு இருந்திருக்கலாம்.

சின்ன வயதிலேயே அம்மணிக்குத் தெய்வபக்தி அதிகம்.

வருவது உரைக்கும் திறமை கூட அப்பொழுதே அவளிடம் காணப்பட்டது. பின்னால் நடக்கப்போவதை முன்னதாகவே கனவில் கண்டு, இன்னது இன்னபடி என்று சொல்லிவிடுவாள். அம்மணி ஸ்ரீலஸ்ரீ அம்மையாராகப் பரிணமித்த பிறகு, அவளது அம்மாவும் அத்தையும் பிறரும் இப்படிப் புகழ்ந்து பேசுவது இயல்பாகிவிட்டது.

அம்மணி சுற்றுப்புற உலகத்தை நன்கு ஆராய்ந்து வந்தாள். சாமி கொண்டாடிகள், பக்த மணிகள், குறி சொல்லுவோர், சாமியாராகிவிட்டவர்கள், மதத்தைப் பாதுகாப்பவர்கள் போன்ற ஆசாமிகள் இந்தச் சமுதாயத்திலே பெறுகிற கவனிப்பும் கௌரவமும், புகழும் பணமும் வேறு எவருக்கும் எளிதாகக் கிட்டிவிடுவதில்லை என்பதை உணர்ந்து, மனசுக்குள்ளேயே திட்டமிட்டு வந்தாள்.

அம்மணியின் ஆன்மீக மலர்ச்சி 'அவ்வையாரம்மன் விரதம்' அனுஷ்டிப்பதில் மணம் பரப்பியது. அவள் வீடு இருந்த தெருவுக்கே அவள் முக்கிய பிரமுகி ஆகிவிட்டாள். பிறகு, இசக்கி அம்மன் பெயரைச் சொல்லிப் பூசை போட்டுக் குறி சொல்லத் தொடங்கினாள். அந்த ஊரில் முக்கிய அந்தஸ்தைப் பெற்றாள். அவளுக்குக் கல்யாணம் ஆனபிறகு, அவளது மனோபாவம் அடியோடு மாறிவிட்டது.

அம்மணி அம்மாளின் கணவனாக வந்து வாய்த்த ஐயாப்பிள்ளை அவர்கள் ஆத்மீகத் துறையில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். அவர் வீட்டில் ராமகிருஷ்ணர், விவேகானந்தர், அரவிந்தர், ரமணர், சிவானந்தர், ராமதீர்த்தர போன்ற 'ஸ்வாமி' களின் அருள் மொழிகள் புத்தகங்கள் உருவிலே ஏராளமாகத் தேங்கியிருந்தன. அவளது பேச்சிலும் அடிக்கடி மதவாடை வீசும். மத அடியார்கள் அவ்வப்போது அந்த வீட்டுக்கு வந்து போவதும் உண்டு.

இச் சூழ்நிலையில் சேர்க்கப்பட்ட அம்மணியின் மனம் மாறுபட்டு, குறித்த ஒரு பக்குவ நிலையை எண்ணிப் பண்பட்டு வந்ததில் வியப்பில்லைதான். ஆத்மீகத் துறையில் தானும் ஓர் அந்தஸ்தைப் பெற்றுகவேண்டும் என்ற துடிப்பு, பேராசையாக வளர்ந்து பசிஏக்கமாக ஓங்கியது. அவள் வாழ்வின் ஒவ்வொரு நாளின் சிறு சிறு பொழுதும் கூட இத் திருப்பணியிலேயே செலவாகும்படி கவனித்துக் கொண்டாள். தனது ஞானத்தை வளர்த்துக்கொண்டாள் அவள். அதன் விளைவாக, பிறாது அஞ்ஞானத்தை அகற்றும் தகுதியைப் பெற்றுவிட்டதாக நம்பினாள்.

மதப் பிரபலஸ்தர்கள் எவரையும் அண்டி வாழ்ந்து புகழ் பெறும் எண்ணம் அவளுக்கு இருந்ததில்லை. தானே தனி மடத்தின் தலைவியாகி ஞானக்கோயில் வளர்க்கவேண்டும் என்ற ஆசைதான் அவளுக்கு. தன் பெயரால் தனி வழிபாட்டுத் துறை—பெருமதத்தின் சிறு

கிளை ஒன்று கண்டு மதத்தலைவி ஆகிவிடவேண்டும் என்று கனவின் உருவைப் பெருக்கி வந்தாள்.

எதிர்ப்படும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு சிறு சிறு சல சலப்புகள் செய்துவந்ததால், அவளுக்கும் புகழ் ஒரு மாதிரி வந்துசேர்ந்தது. தீர்க்க தரிசனம், ஞான திருஷ்டி, வருவது உரைத்தல் என்றெல்லாம் பெயர்பண்ணினுள் அவள். அம்மணி கூறுவதில் பெரும்பகுதி பலித்து விடுவதாக நம்பினுர்கள் பலர். ஆகவே, அவளுக்கும் பக்தர்கள் கூடினுர்கள்.

திருவாளர் ஐயாப் பிள்ளை தம் மனைவியின் ஆத்மதுறை முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்கினுர். இருந்த காலத்தில் மட்டுமல்ல; இறந்த பின்னரும் கூட!

அம்மணி அம்மை, பூஜ்ய மாதா உயர் திரு அம்மையாராக அவதரிப்பதற்குக்கூட ஐயாப் பிள்ளை அவர்களின் மரணம்தான் முக்கிய காரணம் என்று குறிப்பிடவேண்டும.

நல்ல நாளாகப் பார்த்து ஒரு தினத்தில் செத்துவைத்தார் அவர். சொந்த ஊரில அல்ல, யாத்திரை மார்க்கத்தில் ஒரு சத்திரத்திலே!

அபபோது, அம்மையும் ஐயாவும புனித ஸ்தலங்கள்தோறும் சென்று புண்ணியம் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர். வழியிலேயே அவர் மரணம் அடைந்துவிட்டாலும், திட்டத்தின்படி யாததிரையை முடித்துவிட்டே ஊர் திரும்ப எண்ணினுள் அம்மணி. எனினும், கணவனின் உடற் சாம்பலைத் தங்கள் சொந்த ஊரில் ஓடும் காவிரியிலேயே கரைக்கவேண்டும்; அந்திமக் கிரியைகளைச் சிறப்புறச் செய்து அத்தினத்தையே புது மதத் துவக்கப் புனிதத் திருவிழா நாளாகவும் கொண்டாடவேண்டும் என்று எண்ணினுள் அவள்; ஆகவே, கணவன் இறந்த இடத்தில் ஆரவாரமின்றி உடல் தகனம் செய்யப்பட்டது. அஸ்தியை அழகிய வெள்ளிச் செம்பு ஒன்றில் எடுத்து, அதைத் தந்தப் பெட்டி ஒன்றிலே பத்திரப்படுத்தினுள் அவள். மறுநாள் யாத்திரையைத் தொடர்ந்தாள்.

தினமும் தனியிடத்தில் அமர்ந்து கணவனின் அஸ்திக்கு மலர் தூவிப் பூசை புரிந்தாள் அவள். தனது மகிழ்ச்சிக்காக என்பதைவிட, பிறர் பார்த்துப் போற்றுதலாகப் பேசுவதற்காகவே அம்மணி இவ்வளவையும் செய்தாள்.

அவளது யாத்திரை முடிய நான்கு தினங்கள் தானிருந்தன. தனக்கு வேண்டிய சிநேகிதி ஒருத்தியின் வீட்டில் தங்கியிருந்தாள் அவள். பணக்காரியான சிநேகிதியின் அன்பைத் தட்டிவிட்டு, உடனடியாகக் கிளம்பிவிட இயலவில்லை அவளால். அதனுல் அந்த ஊரில் மூன்று நாட்கள் தங்கிவிட நேர்ந்தது.

முதல் நாள் இரவு அவள் ஒரு கனவு கண்டாள். தனது அன்புக் கணவன் ஆவி உருவிலே வந்து

'வேண்டுமடி விடுதலை!' என்று சொன்னதாக நம்பினாள் அவள். புனித ஆத்மாவை வெள்ளிச் செம்பில் அடக்கம்செய்து, தந்தப் பெட்டியில் அடைத்து வைத்திருப்பதனால் அதற்கு மூச்சு முட்டிப் போயிருக்கும் என எண்ணிய அம்மணி தற்காலப் பரிகாரமாக அதைத் திறந்துவைக்க முடிவு செய்தாள்.

அன்று இரவு படுக்கப் போவதற்கு முன்னதாக அம்மணி 'அஸ்தி'யை வெள்ளிக் கும்பா ஒன்றில் கொட்டி, அதை மேசைமீது வைத்தாள். சுற்றிலும் மலர்களைத் தூவினாள். அன்று நிம்மதியான தூக்கம் அவளுக்கு. அதிகாலையில் வழக்கம்போல் ஐந்தரை மணிக்கே எழுந்து குளிக்கப் போனாள் அவள்.

அப்போது அந்த அறையைச் சுத்தம் செய்ய வந்து சேர்ந்தாள் ஒரு கிழவி. வீட்டில் உள்ள அனைவரும் விழுந்து விழுந்து உபசரித்த அம்மைக்குத் தானும் நல்ல தொண்டு புரிந்து மகிழ்விக்க வேண்டும் என்று நினைத்த கிழவி தனது உழைப்பில் அதிகச் சிரத்தை காட்டினாள். படுக்கையைச் சுற்றி வைத்தாள்; பெட்டிகள்மீது படிந்த தூசியைத் தட்டினாள்; மேசையைச் சுத்தப்படுத்தினாள்; சில்லறைக் காரியங்கள் பலவற்றையும் செம்மையாகச் செய்து முடித்தாள்.

வெள்ளிக் கும்பாவில் சாம்பல் கிடந்தது அவள் பார்வையை உறுத்தியது. 'எதையோ எரித்து விட்டு—சாம்பிராணி கொளுத்திய கரியாகக்கூட இருக்கலாம்—இந்தச் சாம்பலை வெளியே கொண்டுபோய்க் கொட்டுவதற்காக அம்மா இதிலே எடுத்து வைத்திருக்கிறாங்க போலிருக்கு. நானே இதைத் தூரக் கொட்டி விட்டுப் பாத்திரத்தையும் அலம்பி விடுகிறேன்' என்று எண்ணினாள் கிழவி. அப்படியே செய்தும் தீர்த்தாள்.

> இந்த உலகத்தில் எதுவுமே நிச்சயமில்லை! ஆம்; இந்த உலகத்தில் யாருக்குமே எதுவுமே நிச்சயமில்லைதான். அப்படித்தான் வேதாந்திகள் சொல்லுகிறார்கள். ஆனால், அந்த வேதாந்திகள் தங்குவதற்கு மட்டும் சகல சௌகரியங்களும் பொருந்திய எத்தனையோ மடங்கள் சர்வ நிச்சயமாக இருக்கின்றன. சாப்பாட்டு விஷயத்திலோ சாம்ராஜ்யபதிகள்கூட அவர்களிடம் பிச்சை எடுக்கவேண்டும்.
>
> —விந்தன்

ஏழு மணி சுமாருக்கு அறையில் காலடி பதித்த அம்மணி அம்மையின் பார்வை மேசை மீது தாவியது. அங்கு சூன்யம் கொலுவிருந்ததைக் கண்டு திடுக்கிட்டாள் அவள். தாவிச் சுழன்ற கண்கள், மூலையில் ஒரு பெட்டி மேலிருந்த கும்பாவைக் கண்டன. வெள்ளிக் கும்பா காலியாகிப் 'பளிச்'சென்று மின்னிக்கொண்டிருந்ததும் பகீரென்றது அவளுக்கு. பதறினாள். அவள் மனதில் அமைதியே இல்லை,

அச் சமயம் முகத்தில் திருப்தி நிலவ அங்கு வந்து சேர்ந்தாள் கிழவி. "அம்மா, எல்லாவற்றையும் சுத்தம் செய்தாச்சு. வேறே வேலே ஏதாவது செய்யணுமா?" என்று கேட்டாள் பணிவாக.

கடுகடுப்பை அவள் எதிர் பார்க்கவில்லே. அம்மை ஏன் அப்படி எரிந்து விழ வேண்டும் என்றும் அவளுக்குப் புரியவில்லே!

"உன்னே யாரு இந்த வேலே செய்யச் சொன்னது? வெள்ளிக் கும்பாவிலே இருந்ததை என்ன செய்தாய்?"—சிறிஞள் ஞானக் கொழுந்து.

"தூசப் போடுகிற சாம்பல் தானேயின்னு சாக்கடையிலே கொட்டிவிட்டேன். ஏனம்மா, இப்படிக் கோபிக்கிறீங்க?" என்ருள் கிழவி.

அவளேச் சபித்துச் சபித்தே சாகடிக்கலாமா அல்லது, அப்படியே அடித்துக் கொல்லலாமா என்று ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது அம்மணி அம்மைக்கு. அமைதியை உபதேசித்த அறிவு ஒரு உண்மையையும் உணர்த்தியது. அதனல் தனது ஆங்காரத்தை அவியச் செய்தாள் அவள்.

"பரவால்லே அம்மா. அதிலே மந்திரம் ஜெபிச்சு வைத்திருந்தேன். இன்னும் ஒரு நாள் ஜெபிக்கணும். அரைகுறையாக மந்திரிக்கப்பட்டதைக் கண்ட இடத்திலே போட்டிருந்தால் வீட்டில் இருக்கிறவங்களுக்கு ஆபத்து வந்தாலும் வந்துவிடும். அதை மிதிக்கிற குழந்தை குட்டிகளுக்குப் பீடை ஏற்பட்டாலும் ஏற்படலாம். அதனலேதான் கேட்டேன். அதை ஜலத்தாரையிலே தானே கொட்டினே? தண்ணீர் அடித்துக்கொண்டு போய்விடும், இல்லேயா?"

மெதுவாகப் பேசி, பேசும் பொழுதே கிழவியின் முகத்தைக் கவனித்தாள் அம்மை. தனது சொற்கள் சரியான வேலே செய்வதை உணர்ந்து மகிழ்ந்தாள்.

பயம் கப்பிக் கொண்டது அறியாமையின் உருவான கிழவியை. "ஐயோ அம்மா, எனக்குத் தெரியாதே......" என்று கதறத் தொடங்கிஞள் அவள்.

"கத்தாதே கிழவி. அப்புறம் வீட்டிலே உள்ளவர்களுக்குத் தெரிந்துவிடப் போகிறது. தெரிந்ததோ, உனக்குத் தான் ஆபத்து. உன் வேலேயும் போய் விடும். வீண் தொல்லே தருவாங்க" என்று வார்த்தைகளே வெண்ணெய் ஆக்கிப் பிரயோகித்தாள் அவள்.

"இது யாருக்குமே தெரியாதம்மா. நீங்க வீட்டம்மா கிட்டே சொல்லிப் போடாதீங்க" என்று கெஞ்சிஞள் கிழவி.

"பயப்படாதே, கிழவி. நான் ஏன் சொல்லப் போறேன்? நீ தப்பித் தவறி வாயைத் திறந்துவிடப்போகிறே! ஜாக்கிரதை! இந்தாம்மா, இதை வைத்துக் கொள்" என்று ஐந்து ரூபாய்

நோட்டு ஒன்றைக் கொடுத்தாள் அம்மணி.

"நீங்க நல்லாயிருக்கனும் அம்மா. உங்க தங்கமான மன சுக்கு உங்களுக்கு எந்தக் குறை யும் வராதம்மா"

"முண்டம்! முட்டாத்தன மாகக் காரியம் செய்து விட்டதே ...ஊம்... பரவால்லே..." என்று தலையைச் சொரிந்தாள் அம் மணி. வெள்ளிக் கும்பா, செம்பு, தந்தப் பெட்டி எல்லா வற்றையும் அவசரம் அவசர மாகப் பெரிய பெட்டிக்குள் அடக்கம் செய்தாள் அவள்.

'வேண்டுமடி விடுதலை!' என்று கிளர்ச்சி செய்த ஆத்மா வெளியேறி, இப்படிப் புரட்சி கரமாகச் சாக்கடையில் போய் முடிவுறும் என்பதை அம்மணி கனவில் கண்டவளே அல்லள். இவ்விதமான முடிவைப் பெற்ற கணவனின் 'ஆத்மா' சாந்தி அடையுமா, அதைப் பற்றிச் சேதி சொல்ல அவர் கனவில் தோன்றவில்லையே என்று அவள் கவலைப்படவுமில்லை. விசேஷ மாக ஏதும் நடவாதது போலவே காரியங்களைச் செய்து முடித் தாள் அவள்.

ஊர் போய்ச் சேர்ந்ததும், நாள் நட்சத்திரமெல்லாம் பார்த்து, அஸ்திகரைப்புப் புனித விழாவை நடத்தத் திட்டமிட் டாள் அம்மை. திடீரென்று ஒலி பரப்பினாள், கணவன் தன் கன விலே தோன்றி ஓர் உண்மையை உரைத்தார் என்று. அவர் காவிரி யில் கலந்துவிட விரும்பவில்லை யாம். சமாதியில் குடிபுகுந்து, மக்களுக்கு நல்வழி காட்ட அவ் வூரிலேயே கோயில் கொண் டருள ஆசைப்படுகிறாராம். அதற்கு ஆவன செய்வோம் என் றாள் அவள்.

அத் திருச்சடங்கு அற்புத விழாவாக இருந்தது. நிலவுப் பூந்துகில் போர்த்து, விரிந்து துவண்ட கூந்தலோடு, கையிலே வெள்ளிச் செம்பு ஏந்தி நின்ற அம்மணி, கடலிடைத் தோன்றிய மோகினியோ எனக் காட்சியளித்தாள். அவளுக்கு இருபுறமும் 'ஸப்த கன்னியர்' என்று ஏழு ஏழு எழிற் பெண் கள் நின்றனர்.

வெள்ளிய ஆடை பூண்டு மலர் முடித்து நின்ற அப் பதினான்கு 'கன்னிப் பெண்கள்' உண்மையிலேயே களங்கமுறாக் கன்னியர்தாமா என்பதை அம்மணி அம்மைகூட அறியமாட்டாள்தான். அந்தந்த பெண்ணின் தனி ரகசியம் அது. ஆயினும், கன்னி என முன் வந்து வரிசையாக நின்று மலர் கள் தூவியும், கவரி குழைத்தும், விளக்குகள் சுமந்தும் உதவி புரிந்தது கண்களுக்கு விருந் தளிக்கும் இனிய காட்சியாகவே விளங்கியது.

அம்மணி அம்மை வெள்ளிச் செம்பை வேறு எவர் கையிலும் கொடுக்கவில்லை. புனிதமான மஞ்சள் துணியால் வாய் இறுக் கிக் கட்டப்பட்டிருந்த அச் செம் புக்குப் பூ அலங்காரம் அதிகம் தான். மந்திர கீதங்கள் ஒலிக்க, மேள தாளங்கள் முழங்க, அவள் தன் திருக்கரத்தாலேயே அச்

செம்பை அதற்குரிய இடத்தில் வைத்தாள். உரிய முறைப்படி சமாதி கட்டப்படும்வரை முன் னின்று கண்காணிக்கவும் தவற வில்லை.

'ஆகா, இதுவன்றோ பதி பக்தி! இவளன்றோ பத்தினித் தேவி!' என்று புகழ்ந்தார்கள் பலரும். அன்றைய நிகழ்ச்சிகள் வகை வகையாய்ப் படமபிடிக்கப் பட்டன. மறுநாள் பல பத்திரி கைகளிலும் படங்களும் செய்திகளும் இடம்பெற்றி ருந்தன. தேவி அம்மணியின் புனிதப் பண்பு பற்றியும், அவ ளது மதக்கோட்பாடுகள் குறித் தும் தொடர்ந்து அடிக்கடி கட் டுரைகள் வெளியாகிக்கொண் டிருந்தன. சமாதியில் இடம் பெற்றுப் பூசையும் பெற்றுக் கொண்டிருந்த ஐபாப் பிள்ளை அவர்களின் பாக்கியத்தைப் பற்றிப் பேசாதவர்களே கிடை யாது.

சாக்கடையில் கலந்துவிட்ட ஐபாப்பிள்ளையின் அஸ்தியும், அதிலிருந்து கிளம்பி ஓடிவிட்ட தாக அம்மை நம்பிய ஆத்மா வும் சமாதியில் குடி புகுந்த வெறும் வெள்ளிச் செம்பைப் பற்றி என்ன அபிப்பிராயம் அறி விக்கும் என்று ஆராய்ந்து வரக் கூடிய நிருபர் இந்த உலகத் திலே ஒருவர் கூட இல்லாத தால், அந்த மர்மம் மர்மமாகவே மங்கி விட்டது. 'பூஜ்ய மாதா' வாக மாறி விட்ட அம்மணிக்குப் பைத்தியமா என்ன, நடந்த உண்மைகளை ஊசறிய உளறு வதற்கு?

---


**மாதவிடாய் நின்றுபோனதா?**

**நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)** Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/888

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலப மாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

**கர்ப்பதடை**

**நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)**
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாத விடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்து களை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
கி பிராஞ்ச 134 SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

# ஆள்மாறாட்டம்

எஸ். ஆறுமுகம்

தாம்சன் காணாமல்போன, தன் மகனை வெகுகாலமாகத் தேடிக் கொண்டிருந்த விவரத்தை நாங்கள் அனைவரும் அறிந்திருந்தோம். இந்த ஒரே முக்கிய காரணத்திற்காகவே அவன் கலிபோர்னியாவிற்கு வந்து செல்வது வழக்கம். காணாமற்போய்விட்ட அவன் தன் மகனது அங்க அடையாளங்களையும் அடிக்கடி கூறுவதுண்டு.

"திருட்டுக் குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்ட ஒரு இளைஞனைப்பற்றிக் கூறினீர்களே, அவன் கண்களின் நிறம் நினைவிருக்கிறதா?" என்று அன்று தாம்சன் வழியில் கண்ட ஒருவனிடம் வினவினான்.

வழிப்போக்கன், "அவன் கண்களின் நிறம் கறுப்பு" என்று சுட்டிக்காட்டினான்.

"என் மகன் சார்லசின் கண்கள் நீலநிறம் பெற்றவையாயிற்றே" என்றான் அவன், சில கணநேர நினைவு விழிப்பின் பிறகு.

அவன் போய்விட்டான். தாம்சனின் இந்த விசித்திர விசாரணை, பொதுமக்கள் கும்பலில் தனித்ததொரு பேச்சுக்கு இடமாக இருந்தது. காணாமல்போன சார்லஸ் பற்றிய துப்பு அறிவதற்கென, அது குறித்துத் தனியே மக்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டது.

தாம்சனின் வாழ்க்கை சற்று விசித்திரம் வாய்ந்தது. அவன், தன் சரிதையை ஒரு விருந்தில் கூறியவிதம் இரக்கம் வாய்ந்ததாக இருந்தது. அவனுடைய பருவ ஆரம்பத்திலேயே அவனது இளம் மனைவி இறந்து போனாள்; அவன் மகன் சார்லஸ் எங்கோ காணாமல் போய்விட்டான். அவனைப்பற்றி நாளது வரை எந்த விபரமும் கிடைக்கவில்லை. பன்னிரண்டு வயதுச் சிறுவனாக அன்றிருந்த தன் மகன், இப்போது கண்டுபிடிக்கப்பட்டால் ஏறக்குறைய இருபத்தைந்து வயது வாலிபனாக இருப்பான் என்று எண்ணமிட்டான் தாம்சன். அந் நினைவுகளில் அவன் கண்களில் கண்ணீர் ஒட்டிநின்றது.

ஒருநாள், தாம்சன் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கையில் இளைஞன் ஒருவனின் குரலைக் கேட்டான். சிறுவயதில் கேட்கப்படும் சார்லஸின் குரலை அடையாளமாகக் கொண்டு, அந்தக் குரலுக்குரிய அதே இளைஞனே தன் மகன் என்பதாகக் கூறி, பின் ஏமாற்றமடைந்த சம்பவம் பிரசித்தம் பெற்றது.

அதற்கப்புறம், உயிரோடிருப்பவர்களிடையே தன் மகனைத்

தேடுவதை நிறுத்திக்கொண்ட தாம்சன் கல்லறைகளேயும், மாணப்பதிவுப் புத்தகங்களையும் சோதனையிடுவதில் முனைய ஆரம்பித்தான்.

அப்பொழுது அடுத்துள்ள மலைக்குன்றின் உச்சிக்கு அவன் அடிக்கடி போய்வருவது வழக்கம். மனம் உடைந்துபோன அவனுக்கு வேதநூலின் உண்மை விளக்கங்கள் நிம்மதி பயத்தன.

ஒருநாள், கல்லறை தோண்டும் கிழவனைக் கண்டு தாம்சன் "ஐயா, நீங்கள் எப்போதாகிலும் சார்லஸ் தாம்சன் என்பவனைச் சந்தித்திருக்கிறீர்களா?" என்று கேட்டான்.

"சார்லஸ் தாம்சன் அநேகமாக இறந்துதான் இருக்கவேண்டும், கிறிஸ்தவ மதத்தைத் தழுவாதிருந்திருப்பின். முக்கால்வாசி அது அவனாகத்தான் இருக்கவேண்டும்" என்றான் கிழவன் சற்று யோசித்தபின் தீர்மானமான குரலில்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தாம்சன் அவ்விடத்தில் வெகு நேரம் தங்க நேர்ந்தது. நகரத்தை நோக்கி அவன் தன் முகத்தைத் திருப்பியபோது, விளக்குகள் மின்னத் தொடங்கியிருந்தன; பயங்கரமான சுழல் காற்று வீச ஆரம்பித்தது. வீதியின் திருப்பத்தில் யாரோ பணத்தைக் கோரும் சப்தமும், துப்பாக்கியைத் தொடும் அரவமும் பிணைந்து கேட்கலாயின. அடுத்த கணம் அந்தக் கிழவன் எழுந்தான். அவன் கை ஒன்று துப்பாக்கியைப் பற்றியிருந்தது. மற்றொன்று அவ்வுருவத்தின் குரல் வளையைப் பிடித்திருந்தது

"இளைஞனாகக் காணப்படும் உன் பெயர் என்ன?" என்றான் தாம்சன்.

"தாம்சன்"

கைதியின் மீதிருந்த கிழவனின் இறுகிய பிடிப்பு அவனுடைய தொண்டையை விட்டுக் கரங்களுக்குத் தாவியது.

"சார்லஸ் தாம்சன், என்னோடு வா—" என்றான் தாம்சன், இளைஞனைப் பார்த்து.

தாம்சன் தன் காணாமல் போன மகனைக் கண்டு பிடித்து விட்டதாக அடுத்த தினம் காலையில் பேசிக்கொண்டார்கள்.

ஆனால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வாலிபனின் தோற்றம் பழக்க வழக்கங்கள், ஒழுக்கம் இவை எதிலும் தாம்சனின் புதல்வனது தடம் துளியும் காணப்படவில்லை என்பதை மட்டும் கூறத்தான் வேண்டும். இதை தாம்சன் நன்கு உணர்ந்தே இருக்கவேண்டும். புதிதாக அடைந்த மகன் பேரில் அவனுக்குச் சிறிதும் அன்பில்லை, பாசமில்லை. அவன் வேண்டிய வணக்கமும் பணிவும் இளைஞனிடமிருந்து கிடைத்தன. அவன் எதிர்பார்த்த சீர்திருத்தம் முடிவு கண்டது. ஆனபோதிலும், ஏனோ எதுவும் தாம்சனின் உள்ளத்தைச் சாந்தப்படுத்த மறுத்தது. அந்த வாலிபனைத் தன் வாரிசு மகனாகப் பாவிக்கக் கிழவன் மனம் மறுத்தது. அந்த இளைஞன் தாம்சனிடம் அன்புடன் நடந்து

கொண்டான். இருந்தும், அவன் அழகிய உருவம் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தது. சிலர் அவன் தாம்சனின் புதல்வனே என்றும் முடிவு செய்தனர்.

ஆனல், வயதான தாம்சன் கொஞ்சமும் மகிழ்வுடன் காணப்படவில்லை. அந்த இளைஞனைத் தன் மகன் என்று உரிமை கோருவதற்குரிய மதச் சடங்குகள் அனைத்தையும் முடித்தும்கூட மனம் குழம்பிய அந்நிலையில் வேதநூலைப் புரட்டி, அதில் 'உதாரி மகன் கதை'யைப் படித்தான்; மன ஓர்மையின் பகுதியைத் தான் உணரத் தவறியதாகவும் உணரலானன் அவன். தனக்கும் தன் மகன் சார்லசுக்கும் சடங்குகளின் உரிய புனிதத் தன்மையை நல்குவதாக நினைத்தான் அவன். ஆகையால், சார்லஸ் தோன்றிய அடுத்த ஆண்டு அவனுக்கு ஒரு விருந்து கொடுக்க நிச்சயித்தான் தாம்சன்.



"நாடோடிக் கும்பலினின்றும் உன்னைக்கண்டு அழைத்து வந்த விபரம் அறிந்த ஒவ்வொருவரையும் நீ விருந்துக்கு மறந்துவிடாமல் அழைக்கவேண்ம், சார்லஸ்" என்று தாம்சன் டுணித்தான்.

விருந்துக்கு நாங்களெல்லோரும் போயிருந்தோம். ஸ்மித், ஜோன், ப்ரௌன்—இப்படிப் பலரும் எங்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இரவு உணவு நேரப். தாம்சனுக்கு வரப்போகும் ஏதோ ஓர் சம்பவத்தைப் பற்றிய அடையாளம் ஏதோ ஒன்று மனதைக் குடைந்துகொண்டிருந்தது. மேஜையை வளைத்த வண்ணமிருந்த தாம்சன் அமைதி

யற்றிருக்கக் காணப்பட்டான்.

"எனது கிறிஸ்தவச் சகோதர சகோதரிகளே! நாடோடிக் கும்பலிலிருந்து மீட்கப்பட்ட என் மகன் சார்லஸ் என்னிடம் வந்து இன்று சரியாக ஒரு ஆண்டு பூர்த்தியாகிறது; இப்போது அவனைப் பாருங்கள். சார்லஸ், எழுந்து நில்" என்று நிறுத்தினான் தாம்சன்.

சார்லஸ் உண்மையாகவே மிக அழகான இளைஞனாகக் காணப்பட்டான் அவனது மகிழ்வுடன் கூடிய மாலை உடையில். தன் ஊதாரித்தனத்தின் தவறுணர்ந்தவனாக அவன் தன் தந்தையின்முன் பணிவுடன் கூடிய கண்களுடன் நின்றான்.

"அவன் பதினைந்து வருடங்களுக்கு முன் என் வீட்டை விட்டுப் போனான், ஊதாரியாக, ஊர்சுற்றியாக. நான் பெரும் பாவியானேன். கடலிலும் நிலத்திலுமாக அவனைத் தேடினேன். சளைக்கவில்லை. அவன் என்னிடம் வரட்டுமே என்று காத்திருக்கவில்லை. அவனைத் தேடிக் கடைசியில் கண்டுபிடித்தும் விட்டேன்..."என்று மறுபடியும் தொடர்ந்து நின்றான் தாம்சன்.

அதே சமயம், வெளி வராந்தாவில் கும்பலுக்கிடையில் பலத்த சத்தமொன்று பரபரப்புடன் புறப்பட்டெழுந்தது. இரைச்சல் தொடர்ந்தது. அநாகரிகமான கந்தலுடையுடன் நன்றாகக் குடித்திருந்த ஒரு வாலிபன் உள்ளே ஓடி வந்தான். கிழிந்துபோன தொப்பியை விலக்கிவிட்டான் அவன். நாற்காலிக்குப் பின் அவன் போய் நின்றான். திடுமென்று அவனது அலைந்த பார்வை வெளிறிய முகத்துடன் நின்ற சார்லஸ் தாம்சன் மீது ஓடி நின்றது. மங்கிய பால்ய நினைவுடன் உந்தப்பெற்ற அந்த நாடோடி பலத்த சிரிப்புடன் போய் மேஜையின் மீது தட்டினான்; கண்ணாடிகளை வீசியெறிந்தான்; அந்த இளைஞன் சார்லஸ் உடல்மீது விழுந்தான்.

"ராஸ்கல், யாரை ஏமாற்றினாய்?" —நாடோடி கூச்சலிட்டான்.

"உஷ். சத்தம் ஏன்? உட்கார் முதலில்" என்று பதில் கொடுத்தான் சார்லஸ் தாம்சன். எதிர்பாராது வந்து சேர்ந்த இந்தப் புது விருந்தாளியைக் கண்டதும் அவனுக்கு உடல் பூராவும் நடுங்கியது.

"நாடோடி, இந்த வீட்டை விட்டு ஓடிவிடு" என்று இரைந்தான் கிழவன் தாம்சன்.

"ஏய், இந்த ஒயினைக் குடித்துவிட்டு ஓடிவிடு" என்று சொல்லியவாறு, நடுங்கும் கரங்களால் சார்லஸ் தாம்சன் ஒரு கிளாஸ் நிறைய ஒயினை ஊற்றினான்.

குடித்துவிட்டு நின்ற அந்த இளைஞனைக் கண்டதும் ஏனோ தாம்சனுக்குத் தனித்த பாசம் கனிந்தது. நாடோடியைக் கைப்பற்றியவாறு, சூழ இருந்த விருந்தினர்களை வளையமிட்டு ஓடிச் சென்றான் கிழவன்.

"நில்லுங்கள்"

சார்லஸ் ஓலமிட்டான்.

கிழவன் நின்ருன். திறந்த ஜன்னல் ஊடே மூடுபனியும் காற்றும் சில்லிட்டுப்படிந்தது.



"என்ன காரணம்?" என்ருன் தாம்சன் வெறித்த பார்வையைச் சார்லஸ்மீது படியவிட்டவனுக.

"ஒன்றுமில்லை, நில்லுங்கள்! நாளைவரைக் காத்திருக்கச் செய்யுங்கள் அவனை... ஆமாம்..."

வாலிபனின் குரலில் ஏதோ ஒரு காரணம் தொனித்தது. இனம் புரியாத பயம் கிழவனின் இதயத்தைப் பற்றிக்கொண்டது.

"எல்லோரும் அங்கேயே நில்லுங்கள். சார்லஸ், நான் உத்தரவிடுகிறேன்-கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். யார் இவன்...?" என்று கர்ஜிக்கத் தொடங்கினுன் தாம்சன்.

"உங்கள் மகன்!"

சார்லஸ் கூறியபதிலை இரண்டொருவரே கேட்க முடிந்தது.

இரவு நெருங்கவே, விருந்தினர் அனைவரும் தாம்சனைவிட்டுப் பிரிந்தார்கள். விளக்குகள் வெறிச்சோடிய அறைகளில் மங்கலாக ஒளி காட்டின. அந்த ஹாலில் மூன்றே மூன்று உருவங்கள் மட்டுமே காணப்பட்டன. நாடோடி இளைஞன் நன்ருகக் குடித்த மயக்கத்தில் கண்ணயர்ந்து கிடந்தான். அவன் பாதத்தடியில் சார்லஸ் தாம்சனுக இதுவரை பாவிக்கப்பட்ட அந்த வாலிபன் கிடந்தான். அவர்களுக்குப் பக்கத்தே பாதி உருவமாக நீர் மண்டிய கண்களுடன் கிடந்தான் கிழவன் தாம்சன்.

"ஆண்டவனுக்குத் தெரியும் நான் உங்களை வேண்டுமென்று ஏமாற்றவில்லையென்று. அன்று இரவில் நான் கூறிய பெயர் முதன் முதலில் எனக்கு ஞாபகம் வந்தது. அந்தப் பெயரையுடையவன் மாண்டதாக நான் எண்ணினேன். மீண்டும் நீங்கள் என்னை வினவிடுத்த போது, என்னை விடுவிக்குமளவுக்கு உங்கள் இதயத்தைத் தொடக்கூடியவாறு நான் தந்திரமாக நடித்தேன். ஆனல் பின்னர் என் முன் புதுவாழ்வு மலரக் கண்டேன். உங்கள் அன்பை நான் திருடிக் கொண்டதையும் உணர்ந்தேன்"



தாம்சன் அசையவில்லை சார்லஸ் தேம்

பும் மொழிகளால். இன்னும் தூங்கிக்கொண்டுதான் கிடந் தான் புதிதாக வந்த அந்த ஊதாரி இளைஞன்.

"ஐயா, தந்தை என்று கோரும் உரிமை பெற்றவர் எனக்கில்லை. நான் பெரிதும் களிப்படைந் தேன்"

சார்லஸ் எழுந்து கிழவன்முன் நின்றான்.

"உங்கள் மகனுக்கும், அவ னது வாரிசுக்கும் குறுக்காக நான் வருவேனென்று பயப்படா தீர்கள். இதோ இவ்விடத்தை விட்டுப் புறப்படுகிறேன். ஒரு போதும் நான் திரும்பவேமாட் டேன். உலகம் பெரிது. உங்கள் அன்புக்கு நன்றி. இதன் மூலம் நாணயமான நல்வாழ்வைப் பெற் றேன். வருகிறேன். வணக்கம்."

அவன் கதவை அண்டியதும், திடீரென்று பின் திரும்பினான் கிழவன். இளைஞனின் கைகளைத் தூக்கி முகத்தில் முத்தங்கள் கொடுத்தான்,

"சார்லஸ்!"

பதில் இல்லை.

"சார்லஸ்!"

கிழவன் பாய்ந்தோடினான். கதவு திறந்திருந்தது. விழிப் படைந்த பெரிய நகரத்தின் தோற்றம் அவன் முன் நின்றது. ஆனால், அதில் கடைசிவரை அந்த இளைஞனின் அடிச்சுவடு கள் காணப்படவே இல்லை!

[மூலம்: ப்ரான்ஸிஸ் ப்ரெட் ஹார்ட்]


## புதிய சுவைமிக்க இலக்கிய விருந்து

★

| | | |
|---|---|---|
| நினைவுச் சின்னம் | இளமைப்பித்தன் | 1—0—0 |
| கடல் முத்து | எஸ். ஆறுமுகம் | 1—0—0 |
| உலக அரங்கில் | டி. கே. சீனிவாசன் | 1—0—0 |
| தபாலாபீஸ் விநோதங்கள் | க. சண்முகசுந்தரம் | 0—8—0 |
| இலக்கியச் சந்தையில் | மு. அண்ணமலை | 0—8—0 |
| கம்பன் கெடுத்த காவியம் | ,, | 0—4—0 |
| வீடும் விளக்கும் | சுகி | 0—8—0 |
| தாஜ்மஹால் | நா. பாண்டுரங்கன் | 0—8—0 |
| கொடி முல்லை | வாணிதாசன் | 0–12—0 |
| வருங்காலத் தமிழகம் | கா. அப்பாத்துரை | 0–12—0 |
| இந்திய மொழிச் சிக்கல் | ,, | 2—8—0 |
| கழைக்கூத்தியின் காதல் | பாரதிதாசன் | 1—0—0 |

**பொன்னி லிமிடெட்**

த. பெ. எண். 1165 :: சென்னை—21.

# பெண்கள் முன்னேற்றம்

சுலோசனா

மறுமுறை சரசு சங்கத்திற்கு வருகையில், ரத்தினாவிற்கென்று கத்தரித்து வைத்திருந்த இரண்டு சட்டைத் துணிகளையும் கூடவே கொண்டு வந்தாள். நவநாகரிக முறையில் சட்டை தைக்கக் கமலியிடம் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவள் ஆசை. "குழந்தைகளுக்குச் சட்டை தைக்கையில், மார்பின் சமீபம் சுருக்கத்தை வைத்துத் தைப்பது அழகாக இருக்கும். இடுப்பில் வைத்துப் பிடிப்பது அத்தனை அழகாயிராது. அதோடு சிறிது நாகரிகச் சின்னத்தையும்சேர்த்துக் கொண்டால் வெகு அழகாயிருக்கும். இடுப்பில் சுருக்கம் வைப்பதைச் சில தாய்மார்கள் விரும்புவார்கள். அப்படித் தைக்கும் சட்டைகளில் ரிப்பன்பெல்ட் போட்டுக்கொள்வது வெகு அழகாகவிருக்கும்" என்றாள் கமலி.

"நான் அன்றொருநாள் ஒரு பேட்லாக் புத்தகத்தைப் பார்த்தேன். ஆங்கிலப் புத்தகமாகையால் படிக்க முடியவில்லை. படங்களை மட்டும் பார்த்தேன். ஆனால் எத்தனை விதமான சட்டைகள்! நமது குழந்தைகளுக்கு அம்மாதிரியெல்லாம் தைத்துப் போட்டால் எவ்வளவு அழகாகயிருக்கும்!" என்றாள் சரசு.

"தைக்கத் தெரியாத பெண்களுக்கு மற்ற பெண்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் இம்மாதிரிச் சங்கங்கள் நிறுவவேண்டுமென்பது. லேடி ணைந ஆரம்பித்து வைத்துள்ள சங்கம் பெண்களுக்குத் தையல் வேலை கற்றுக்கொடுக்க பலமாக உழைத்ததுதான். ஆனால் நமது பெண்கள் சென்று கற்றுக்கொண்டால்தானே? 'தயல்காரனுக்கு இரண்டு காசைக் கொடுத்தால் போச்சு அழகாகத் தைத்துக் கொடுக்கிறான்' என்று தர்க்கம் செய்வார்கள். தைக்கத் தெரியாதிருந்தால் அந்த இரண்டு காசை மிச்சப்படுத்துவதுடன் மனப்பிரகாரமும் தைக்கலாமல்லவா? அது மட்டுமல்ல, தையல்காரன் துணியை அதிகமாக வீணாக்குவதுமுண்டு. ஆகவே, தைக்கத் தெரியும் பெண்களுக்குத் துணியும் காசும் மிச்சம்!"

"என் குழந்தைகளுக்கு நானே சட்டைகள் தைக்கவேண்டுமென்பதுதான் என் ஆசை ஆனால் நாகரிகமாக நல்ல தினுசாகத் தைக்கும் முறைகள் அறியேன். கற்றுக்கொள்ளவேண்டுமென்று மிகவும் ஆசை!"

"அதற்கென்ன! பேஷாகக் கற்றுக்கொள்ளுங்கள். எனக்குத் தெரிந்த முறையெல்லாம் கற்றுத் தருகிறேன். நம் சபாவிற்கு எல்லாவிதமான தையல்களும்

தெரியும். அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமே கிடையாது. அவர்களை நம் தலைவியாகக் கொண்டதற்குச் சங்கம் பெருமைப்படவேண்டும்!"

"நமது நாட்டில் அவர்களைப் போல் பத்துப் பெண்களிருந்தாலும் போதுமானது; பெண்களின் வாழ்க்கையே முன்னேறிவிடும். ஆனால் அப்படித்தான் இல்லையே!"—கமலி புன்னகை புரிந்தவாறே சரசு கொண்டுவந்த துணிகளை யெடுத்துத் திருப்பி திருப்பிப் பார்த்தாள். "குழந்தைகளுக்கேற்ற துணி, உறுதியானது, அழகான படங்கள் அச்சிடப்பட்டிருக்கும் இதுமாதிரித் துணிகள்தான் குழந்தைகளுக்கேற்றது. சரசு, அடுத்தவாரம் வரும்போது அந்த கேட்லாக்கையும் கொண்டு வா. நல்ல மாதிரி 'பாஷ'னுகத் தேர்ந்தெடுத்துத் தைக்கலாம்!" என்றாள்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் இடையே வந்தாள் லீலா.

"ஏண்டி கமலி, வெள்ளைக்காரப் பெண்கள் கர்ப்ப சமயத்தில் ஒரு தினுசான 'ப்ராக்' (Frock) அணிந்து கொள்கிறார்களே, அது போல நம் பெண்களும் அச்சமயத்தில் உடைமாறி அணிவது அவசியமா?"—பேசிக்கொண்டே உட்கார்ந்த லீலா மற்றிருவரையும் மாறி மாறி நோக்கினாள். "இதென்ன கேள்வி? படிக்கும் பெண்கள் இப்போதே அதைப் பற்றிக் கவலைப்படுவானேன்?" என்று யோசித்த சரசு, பிறகு,

> காற்றை அளக்கும் கருவி, காரிருளைப் போக்கும் மின்சாரம், கடலுக்குள் குடைந்து செல்லும் கலம், காதருகே உலகைக் கொண்டுவந்து சேர்க்கும் கருவி, இவைகளையும், இவைகளையும்விட அதிக அற்புதமான முறைகளையும் கண்டுபிடித்த வெளி உலகு எவ்வளவு வளர்ந்திருக்கிறது! அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இங்கு நாம் எந்த அளவோடு நின்றிருக்கிறோம் என்று பாருங்கள்!
>
> —அறிஞர் அண்ணாத்துரை.

"எல்லாம் முன்கூட்டியே கற்றுக்கொள்வது நல்லது தானே!" என்று மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டாள். அதன் பின்னர் லீலாவின் கேள்விக்குக் கமலி என்ன பதிலளிக்கப்போகிறாளோ வென்று அவளை ஆவலோடு நோக்கினாள். "நமது பெண்களில் சிலர் பாவாடை கட்டிக்கொண்டு அதன் மீது புடவை உடுத்திக்கொள்வார்கள்; சில பெண்கள் பாவாடை அணிவதேயில்லை. கர்ப்ப சமயத்தில் பாவாடையை இறுக்கமாகக் கட்டக்கூடாது. புடவையையும் தளர்வாகவே கட்டவேண்டும். மொத்தத்தில் கர்ப்ப சமயத்தில் தளதளவென்றிருக்கும் லகுவான உடையணிவது நல்லதுதான். வெள்ளைக்காரிகள் எவ்வளவு அழகாக இதுமாதிரி முறைகள் அனுசரிக்கின்றனர்!" என்றாள் கமலி. "அமெரிகாவில் ஒரு கிராமத்தில் மிஸஸ். ஜாக்ஸன் என்றொருபெண் தனது கணவனோடு வசித்து வந்தாளாம். நெடுநாட்களாக அவ

ளுக்குக் குழந்தையில்லாதிருந்த தாம். அதனல் அவளுக்கு மிகவும் வருத்தம். ஒரு தினம் அந்தப் பெண்ணும் அவள் கணவனும் தெருவில் போகையில், ஒரு கடையில் அழகான பச்சைக் கலர் 'ஸில்க் ப்ராக்' ஒன்று தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டாள். அதை வாங்க வேண்டுமென்று அவளுக்கு மிகவும் ஆசை. ஆனல் கணவனிடம் அப்போது கேட்பதற்குத் தயக்கம். ஏனென்றால், அவன் பணக்காரனில்லை. எனினும், மனைவியின் ஆசையை உணர்ந்துகொண்ட அவன் அவளையும் அழைத்துக்கொண்டு அப்பொழுதே கடைக்குள் நுழைந்தான். சட்டை வாங்கியாயிற்று; பொட்டலமும் கட்டியாயிற்று! இருவரும் திரும்பிப் போகையில், கடைக்காரப் பெண் மிஸஸ். ஜாக்ஸனை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டு நின்றாளாம்! மறுதினம் மிஸஸ் ஜாக்ஸனின் சிநேகிதி ஒருத்தி விரைவில் அவளிடம் வந்து கை குலுக்கிக்கொண்டு, 'கங்கராசுலேஷன்' சொன்னாளாம். பிறகு, "இது எத்தனவது மாதம்?" என்று கேட்டாளாம். மிஸஸ், ஜாக்ஸன் பேந்தப் பேந்த விழித்தாள்; அவளுக்கு ஒன்றுமே பிடிபடவில்லை. "மாதமா? நான் கர்ப்பமில்லையே!" என்றாள். சிநேகிதி முகத்திலறைப்பட்டவள்போல் நின்றாள். பிறகு, "நிஜமாகவா? நேற்று பெரிய தெரு கடைக்காரப் பெண் சொன்னாள் மிஸஸ் ஜாக்ஸன் கர்ப்பிணிஎன்று! அவளது கடையில் நீ நேற்று ஒரு 'ப்ராக்' வாங்கவில்லையா..."

அவள் கூறி முடிக்குமுன் மிஸஸ் ஜாக்ஸன் அவசரம் அவசரமாகச் சென்று பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தாள். அது கர்ப்ப சமயத்தில் அணியும் உடை! அவள் முகம் அப்படியே சிவந்துவிட்டது! முந்திய தினம் சரியாகக் கவனிக்காததினல் விளைந்த ஆபத்து!"

லீலாவின் கதையைச் சுவாரஸ்யமாகக் கேட்ட சரசு, "பிறகு என்ன நடந்தது?" என்றாள் ஆவலோடு.

"அந்தச் சட்டையை வாங்கியதே அவளுக்கு ஆசிர்வாதமாயிற்றும்! மறு மாதம் உண்மையாகவே தான் கர்ப்பிணி என்பதை அறிந்த பிறகே மிஸஸ். ஜாக்ஸனின் வெட்கம் நீங்கியதாம். அந்தச் சட்டையை ஆவலோடு தழுவிக்கொண்டாளாம்"

சாசுவும் கமலியும் சிரிப்பதைக் கண்டு லீலாவும் சிரித்தாள்!

"அப்படியானல் சட்டை மாற்றுவதும் ஆபத்து என்று சொல்லு" என்றாள் கமலி சிரிப்பு அடங்கியதும்.

"இல்லை. இங்கு பிசகு நடந்துவிட்டதினலேதானே ஆபத்தும் நேரிட்டது என்றாலும், இறுதியில் அதுவும் நன்மையிலேயே முடிந்தது. அதுதான் கதையின் முக்கிய அம்சம்." என்றாள் லீலா. மற்றவர்கள் அதை ஆமோதித்தனர்.

(வளரும்)

# தம்பி



## தங்கமணி

இமாலயம்போன்ற பெரிய மேகப் பருவதங்கள் மண்டிக் கிடந்த கருநீல வானப்படலத்திலே—ஆகா ஒரே பயங்கரம்! மகா பயங்கரம்! பூதாகாரமான பூகம்ப ஆரவாரம்!

'பளார்!...பளீச்!...சளாக்!' என்று வான வெளியிலே தங்கக் கீறலிட்டுத் தாவிப் பாய்ந்து, நெளிந்து, ஒழுகி மறைந்தன நொள்ளைக் கண்ணின் உள்ளும் பாய்ந்து குடையும் பெரும் மின்வெட்டுக்கள்!

'டட்டடா!...டுட்டுடும்!...குக்குகும்!...' காரிருள்—கார்முகில்—தீ மின்னல்—இவை மூன்றும் குழைந்து, குமுறிக் கொக்கரிக்கும் வானகத்திலே சீறிச் சாடிச் சுழன்று உறுமும் சூறுவளிக் காற்றுகள், ஒன்றோடொன்று அரக்கத்தனமாய் மோதுண்டபோது எழும்பும் பயங்கரப் பேய்க் குமுறல்கள்! அண்ட சராசரங்கள் அனைத்தையும் கிடுகிடுக்கப் பண்ணும் ஊழிக்காலத்துக் கர்ஜனைகள்! பூகம்ப இடிகள்! வெறிபிடித்த இயற்கைத் தாயின் கோபாவேசச் சீறல்கள்!

'ஆய்ய்!...ஊஸ்ஸ்ஸ்!...ஹோய்ய்ய்!...' என்று வீறு கொண்டு வெகுண்டெழும்பி சுற்றிச் சுழன்று, சீறிப் புரண்டு பயங்கர ரீங்காரமிட்டது சூறைக்காற்று! 'ஹூ—ஹூ—ஹூ—ஹூய்ய்!...'—மழை! மழை! மழை! வெறி பிடித்த மழை! உலையில் காய்ச்சிய இருப்புக்கம்பிகளாய்ச் 'சளீர், பளீர்' என்று இரக்கமற்ற பணக்கார தன்மையில் வையகத்தை உருக்கிக் கரைக்கும் ஓலமிடும் பிசாசு மழை!

தொடர்கதை

'படீர்!...படார்!...டொப்! டபார்!'—இதென்ன சப்தம்! சொல்லுகிறேன்:

அதோ!...அந்தத் தமிழ்க் கோட்டையூர்க் கிராமத்தின் தென்கோடியிலுள்ள அந்தச் சிறிய வீட்டின் பின்புறத்து ஓட்டைச் சன்னலின் உடைந்த கதவு, சீறிச் சாடும் சூறைக் காற்றின் கோரத் தாக்குதலால் ஓயாமல் ஒழியாமல் சாடிக் கொண்டிருந்தது, சேயைப் பறி கொடுத்துவிட்டு வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொள்ளும் தாயைப் போல.

ஓயாமல் ஓலமிடும் அந்த ஓட்டைச் சன்னலின் உடைந்த கதவைச் சட்டென்று திரும்பிப் பார்த்ததும், நெஞ்சுக்குள் முடங்கிக் கிடந்த ஆத்திரம், வெறுப்பு, கோபம், மூர்க்கத் தனம் எல்லாம் திக்கித் திணறித் திமிறிக்கொண்டு, வீறிட்டுப் பீறிட்டுக்கொண்டு நெஞ்சை விட்டு எகிறிக் குதித்தன அவனுக்கு!

எவனுக்கு?—அந்த ஓட்டைச் சன்னல் அறைக்குள் வெகு நேரமாக எதையோ தேடிக்கொண்டிருந்த சத்தியமுத்துவுக்கு ஆத்திரம் கொப்புளித்துக்கொண்டு பொங்கியது.

ஓட்டைச் சன்னலின் உடைந்த கதவு மறுபடியும் மறுபடியும் சாடியது; சாடிக் கொண்டேயிருந்தது; சளைக்காமல் சாடிக்கொண்டேயிருந்த சன்னலைப் பார்த்துக்கொண்டிருந்த சத்தியமுத்துவின் உள்ளத்தில் கன்று கொண்டிருந்த வெறித்தனம் குதித்துக் கும்மாளியிட்டது. அவன் குபீரென்று எழுந்தான்; சன்னலை நோக்கி 'ஜிவ்' வென்று பாய்ந்த மறுவினாடி—?

'டபார்...டடக்!'—ஓயாமல் உறுமிக்கொண்டிருந்த உடைந்த சன்னலைப் பேய்த்தனமாக இழுத்து வலித்து 'டபார்!—' என்று மூடினான்; 'டடக்!...' என்று சன்னலின் தாழ்ப்பாளை இழுத்துப் பூட்டினான்; பூட்டி விட்டுச் 'சட்'டென்று திரும்பினான்... அப்போதுதான் அங்கு வந்து அந்த அறையின் வாசலில ஊமையாய் நின்றுகொண்டிருந்த அவனுடைய தம்பி கருணாமூர்த்தியைக் கண்டதும், சத்தியமுத்துவின் உள்ளம் குதித்தது. அவன் கருணாமூர்த்தியை வெறித்து நோக்கியபடி மலைத்து நின்றான்.

தன் அண்ணன் சத்தியமுத்துவின் வெறிபிடித்த நிலையைக் கண்ட கருணாமூர்த்தியின் அடிவயிறு கலங்க ஆரம்பித்தது. அவன் உடல் நடுங்கினான்; உயிர் ஒடுங்கினான். காரணம், சத்தியமுத்துவின் மூர்க்கத்தனம், முரட்டுத்தனம், ஆத்திரத்திலே அறிவு கெட்டு நடந்துகொள்ளும் காட்டுமிராண்டித்தனம், உண்மையைச் சொல்ல, நல்லதைச் செய்ய அஞ்சாத வீரத்தனம். தன் மானமும், ரோசமும் பொருந்திய குணங்களைக் கருணாமூர்த்தி நன்றாக அறிந்து வைத்திருந்தான். அதுவுமின்றி அவன், சத்தியமுத்துவைக் கண்டு பயந்து நடுங்கினதற்கு முக்கியமாக



வேறொரு காரணமும் இருந்தது.

அது என்ன ?...

சத்தியமுத்து, தன் நெருப்பு விழிகளை உருட்டிக் கதிகலங்கி நிற்கும் கருணாமூர்த்தியை வெறித்து நோக்கினான். கருணாமூர்த்தி குலைநடுங்க நின்றான்.

"ஏண்டா வந்தாய் ?... என்னடா பார்க்கிறாய் ?..."

"...இல்லை...வந்து அப்பா, உன்னை அடித்தாரே..."

"ஆமாம், அடித்தார். இன்றைக்குப் . பள்ளிக்கூடத்திற்கு எடுத்துச்சென்ற அவருடைய பேனாவைத் தொலைத்துவிட்டேன்....இப்போது என்னடா அதற்கு ?...நீ எனக்கு ஆறுதல் சொலல வந்தாயாக்கும் !..."—சத்தியமுத்து குமுறினான். அவனை அறியாமலேயே அவன் சிவந்த விழிகள் குற்றாலமாயின. அந்தக் குற்றால விழிகளிலிருந்துவெப்ப நிறைந்த இரண்டு சொட்டுக் கண்ணீர் பிறந்து கன்னத்தின் மீது உருண்டு வழிந்து, அவன் புறங்கையில் விழுந்து, சிதறி மாய்ந்தது.



கருணாமூர்த்தி மேலும் பீதியடைந்தான். அவன் ஒரு வினாடி நடுங்கி, அடுத்த வினாடி எப்படியோ தன்னைத் தைரியப்படுத்திக்கொண்டு தன் அருமை அண்ணனை நெருங்கினான்.

"அண்ணா, தயவு செய்து என்னை மன்னித்துக்கொள்"

"ஏன் ?" என்று கேட்டான் சத்தியமுத்து.

"பள்ளிக்கூடத்திலிருந்து ஓயா மழையில் நனைந்துகொண்டு நீ பறந்துகொண்டிருந்த போது நானும் உன் பின்னாலேயே ஓடி வந்துகொண்டிருந்தேன். அப்போது உன் சட்டைப்பையிலிருந்த பேனா, கீழே விழுந்துவிட்டது......"

"ஆ!...எங்கே அந்தப் பேனா? ...என அப்போதே என்னிடம் கொடுக்கக்கூடாது ?..."—சததிய முத்து, நடுநடுங்கிய கருணாமூர்த்தியை வேகமாக நெருங்கினான்!

"அண்ணா, மன்னிப்பது,

உதைப்பது எல்லாம் உன் பிரியம்! முதலில் இதைக் கேள். உதைப்பாயே என்று உண்மையை மறைக்க நான் விரும்பவில்லை! மூந்தாநாள், ஓர் ஆதித்திராவிடப் பையனை இழிவாகப் பேசி ஏசிய எதிர்வீட்டுச் சித்திராங்கனை அடித்தேன். அவனுக்காகப் பரிந்து வந்து என்னை அடித்தாய் நீ. அதற்காக உன்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன், எடுத்த பேனாவை மறுபடியும் உன்னிடம் தாராமல், நீ அப்பாவிடம் உதை வாங்க வேண்டும் என்று எண்ணி ......"—கருணாமூர்த்தி மேலும் சொல்வதற்குள், சடாரென்று இடைமறித்தான் சத்திய மூத்து.

"அப்படியெனில் உன் ஆசை தீர்ந்துவிட்டது! இல்லையடா? அறிவு கெட்ட முண்டமே! குற்றம் புரிந்தவனை யெல்லாம் பதிலுக்குப் பதில் வஞ்சம் தீர்த்துக் கொள்வதென்றால், இந்த உலகத்திலுள்ள எல்லாரும் ஒருவருக் கொருவர் வஞ்சம் தீர்த்துக் கொண்டு சாகவேண்டியதுதானா? பொறுமை வேண்டாமா? சகிப்புத் தன்மை வேண்டாமா? படித்தும் பகுத்தறிவில்லாத மடையனே! நீயா என் தம்பி? நானா உன் அண்ணன்?..."—கொந்தளித்துக் குமுறிய சத்தியமுத்து, பையில் வைத்திருந்த பேனாவை எடுத்து வைத்துக்கொண்டு நின்ற கருணாமூர்த்தியின் சிண்டைப் பிடித்துப் பேய்த்தனமாக 'உலுக்கு உலுக்கு' என்று உலுக்கினான்! அந்தச் சமயத்தில்,

"அடேய்! அடேய்!...உன் மூர்க்கத்தனமும், முரட்டுத் தனமும் மண்ணாய்ப் போக! குழந்தையைப் போட்டு ஏனடா இப்படி வதைகிறாய்?..." என்று வீறிட்டுக் கூவிக்கொண்டே, அர்தப் பெருமழையில் வெளியே எங்கோ போய்வந்த அவர்களுடைய அப்பா, குடையைப் போட்டுவிட்டுக் குபீரென்று அறைக்குள் பாய்ந்து வந்தார்.

சத்தியமூத்துவின் அரக்கத் தனமான இறுகிய பிடியிலிருந்து விடுதலையடைந்த கருணாமூர்த்தி நெட்டுயிர்த்துச் சோர்ந்து நின்றான். குரூரமான வெறித்தனம் நெஞ்சத்தில் கும்மாளியிடக் குமைந்து நின்றான் சத்திய முத்து. ஒன்றரை மைல் சுற்றியோடி வந்து நிற்கும் பந்தயக் குதிரைக்கு இரைப்பதுபோல, அவனுக்கும், அவன் தம்பிக்கும் 'மூசு மூசு' என்று இரைத்தது!

"அடே, மூர்க்கா! வெறி பிடித்த காட்டெருமையே! ஏன் அவனை வதைக்கிறாய்? உனக்கு என்னடா வந்தது—!" என்று சத்தியமுத்துவின் செவி நுனியை இறுக்கிப் பிடித்து நறுக்கி, இழுத்து, விரித்துக் கேட்டார் அப்பா.

"அப்பா! விடுங்கள் என்னை! இந்தாருங்கள் உங்கள் பேனா!" என்று சீறிக்கொண்டே கருணாமூர்த்தியின் கையிலிருந்த பேனாவை 'வெடுக்' கென்று பிடுங்கித் தந்தையிடம் நீட்டினான் சத்தியமுத்து.

அப்பா, திடுக்கிட்டார்!

[தொடரும்]

# இரு மனைவிகள்

கலைச்செல்வன்

மேஜையின் மீது கிடந்த அந்தக் கடிதம்- முத்துவின் வாழ்க்கையில் படிந்த அவமானக் கறைக்கு அடையாளமாக உருவெடுத்திருந்த அந்தக் கடிதம் அவனைப் பார்த்து உலகின் நகையாடலுக்கு இலக்கானவன் என்பதை நினைவுறுத்துவதுபோல இருந்தது.

வாழ்க்கைத் தடாகத்தில் இன்ப நீச்சல் அடிக்க வேண்டிய வாலிப வயதில் வாட்டத்தின் சாயல் வதனத்தில் வட்டமிடத் துவண்டு, சுருண்டு நாற்காலியில் அமர்ந்திருந்த முத்து கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

அவனுடைய முகத்திற்கு நேரே சுவரில் மாட்டியிருந்த அந்தப் புகைப்படம் அவனை நோக்கிப் புன்னகை புரிந்து கொண்டிருந்தது.

புகைந்துகொண்டிருக்கும் நெருப்பு எண்ணெய் பட்டவுடன் சுடர்விட்டு எரிவதுபோல, துயரத்தால் வெந்துகொண்டிருந்த அவனது இதயம் அந்தப் புகைப்படம் வீசும் புன்னகையால் குமுற ஆரம்பித்தது.

"துரோகி!"—வெந்த இதயத்தின் எழுச்சியால் வெளிவரும் இந்த வார்த்தை அவனுடைய இதயத்திலிருந்து கிளம்பி இரு உதடுகளையும் பிளந்துகொண்டு உதிர்ந்தது.

மறு விநாடி, சுவரில் மாட்டியிருந்த அந்தப் படம்-விமலாவின் புகைப்படம் 'கணீ'ரென்ற ஒலியுடன் தரையைத் தஞ்சம் அடைந்தது!

உடைந்த கண்ணாடித் துண்டுகள் மூலைக்கொன்றாகச் சிதறியோடின. அவனுடைய சிவந்த கண்கள் அக் கண்ணாடித் துண்டுகளையே சற்று நேரம் வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தன.

"மனிதனுடைய வாழ்க்கையும் இப்படித்தானா?" என்று முணுமுணுத்துக் கொண்டே அமைதியைநாடிப் புத்தகங்களைப் புரட்ட ஆரம்பித்தான்.

"வாழ்க்கை என்பது உடைந்துபோகும் வெண்கலக் கிண்ணமல்ல; ஒடுக்கு விழும்



பொன்குடம்'' - அவன் புரட்டிக் கொண்டிருந்த ஏடுகளில் ஒரு பக்கத்தில் கொட்டை எழுத்துக் களில் பொறிக்கப்பட்டிருந்தது அந்த வாக்கியம். அவன் படித் தான்; நான்கைந்துமுறை படித் தான்.

அந்தச் சொற்கள் அவனுக்கு ஏதோ ஒரு புது உற்சாகத்தை யும் நம்பிக்கையையும் உண்டாக் கின. அதே சமயத்தில் அவ னுடைய இதயத் திரையில் தோன்றி மறைந்த ஒரு உருவம் சிறு நெகிழ்ச்சியை உண்டாக்கிச் சென்றது. அவனையும் அறியாது "சாந்தா சாந்தா'' என்று வாய் விட்டுக் கூறினான்.

அந்தப்பெயரை நினைப்பதுவே பாவம் என்று எண்ணிக் கொண்டு இரண்டு ஆண்டு கால மாக உள்ள உறுதியுடன் இருந்த அவன், ஒரு முறையல்ல இரண்டு முறை 'சாந்தா சாந்தா' என்று உச்சரித்தான்!

## 2

சாந்தா! சாந்தா என்ற பெயரில் வேண்டுமானால் சாந்தி இருக்கிறதென்று சொல்ல லாமே தவிர, உண்மையாக அவ ளுடைய வாழ்வில் சாந்தி உண்டா என்றால் 'இல்லை' என்று தான் கூறவேண்டும்.

சாந்தா ஒரு அழகுள்ள அணங்குதான். அவளிடத்தில் அறிவு இருந்தது; அன்பும் இருந் தது; எல்லாவற்றையும்விட அடக்கம் அதிகம் இருந்தது. இருந்தபோதிலும் அவள் வாழ் வில் வளம் காண முடியவில்லை.

சாந்தாவினுடைய அவல நிலை யைப் பற்றிப் பழமை வாதி களின் அகராதிப்படி கூறினால் முன்வினைப் பயனை அனுபவிப் பவள்; சீர்திருத்த வாதிகளின் மொழியிலே நின்று கூறினால் மூடப் பழக்க வழக்கங்கள் நிறைந்த சமூகத்தின் கொடு மைக்கு ஆளான ஒரு அபலை.

அவள் வாழ்வை நசுக்கி விட் டோம் என்ற பூரிப்பில் மூடச் சமுதாயம் அவளைப் பார்த்துச் சிரித்தது! இன்பத்தை இழந்து விட்டோமே என்ற ஏக்கத்தால் சமூகத்தைப் பார்த்து அவள் அழுதாள்.

அருணாசலத்தின் அருமை மகள் அவள். அவர் தன் அருமை மகளை அன்புடன் வளர்த்து வந் தார். ஆனால் அவள் வளர வளர அவருடைய உள்ளத்தில் உண் டாகியிருந்த திகைப்பும் வளர்ந்து கொண்டு வந்தது.

அவள் பருவமெனும் பஞ்சணை யில் அமர்ந்தாள். அவளைத் திருமணம் செய்துகொள்ள ஒருவரும் முன்வரவில்லை. 'ஓடிப் போனவள் மகள்...ஓடிப்போன வள்' மகள் என்று சதா கேலி செய்து கொண்டிருந்தது ஊர் வாய்!

ஆம்; அருணாசலத்தின் இரண் டாவது மனைவி-சாந்தாவின் தாய் அவள் இரண்டு வயதுக் குழந் தையாக இருக்கும் பொழுது சமையல்காரனுடன் ஓடிப்போய்விட்டாள், வயோதிக கணவனிடத்து இன்பம் காண முடியவில்லை என்று எண்ணிக் கொண்டு! காலப்போக்கில்



அருணாசலம் அந்த நிகழ்ச்சியை மறந்திருந்தார். ஆனால் அவள் செயல் சாந்தாவின் திருமணத்திற்கு முட்டுக்கட்டையாக நின்றது.

அவளைத் திருமணம் செய்து கொள்ள முன் வந்த ஒரு சிலரும் ஓடிப்போனவளின் மகள் என்று கேள்விப்பட்டவுடனேயே வந்த வழியே திரும்பிப்போக ஆரம்பித்தனர்.

ஊராரின் கேலிப் பேச்சுக்கும், உறவினர்களின் கிண்டல்மொழிகளுக்கும் பயந்து அருணாசலம் அந்த ஊரைவிட்டே வெளியேறி விட்டார்.

★

திருச்சியிலிருந்து மாயவரத்திற்குக் குடியேறும் பொழுது அவர் ஒரு மாற்றமுடியாத தீர்மானத்துடன்தான் வந்தார். மாயவரத்தில் அவருக்குப் புது முகங்களே காட்சியளித்தன. அவரும் அதைத்தான் விரும்பினார்.

இந்த நேரத்தில்தான் முத்துவும் அவனுடைய தாயாரும் அருணாசலத்தின் வீட்டிற்கு வந்தனர் பெண்பார்க்க. முத்துவை அருணாசலத்திற்குப் பிடித்திருந்தது.

ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு திருமணத்தை முடிக்கவேண்டும் என்று சொல்லுவார்கள் சிலர். அருணாசலம் ஆயிரம் பொய் சொல்ல விரும்பவில்லை. துணிந்து ஒரு பொய்சொல்ல உறுதியுடன் இருந்தார். பெண்ணின் தாயைப்பற்றி அவர்கள் விசாரித்தபொழுது இரண்டு வயதிலேயே சாந்தாவை விட்டு இறந்துவிட்டாளென்று கூறிவிட்டார்.

அருணாசலத்தின் திட்டம் வெற்றி பெற்றது. சாந்தாவின் இருண்ட வாழ்வில் ஒளி விளக்குத் தோன்ற ஆரம்பித்தது.

சாந்தாவை முத்து திருமணம் செய்துகொண்டான். சாந்தாவின் முகம் மலர்ந்தது. அருணாசலத்தின் உள்ளம் மகிழ்ந்தது.

★

சாந்தா, கணவன் முத்துவுடன் இல்வாழ்க்கையில் புகுந்து சரியாக மூன்று மாதங்கள்கூட ஆகவில்லை. இன்பத்தின் எல்லைக் கோட்டை அவள் மிதிக்கக்கூட வில்லை. அதற்குள் அந்தப் பேரிடி முழங்கத் துவங்கிவிட்டது.

அருணாசலத்தின் பொய் வெடி குண்டாக வெடிக்க ஆரம்பித்து விட்டது. உதவி புரிய முன் வராவிட்டாலும் உபத்திரவம் செய்ய அவசரமாக முன்வரும் சில உறவினர்களால் சாந்தாவின் வரலாறு முத்துவினுடைய அன்னையின் காதுக்கு எட்டியது. இதையறிந்தவுடன் நெருப்பை மிதித்துவிட்ட வளைப்போல் இதயம் துடிக்க, ஆவேசம் வந்தவளைப்போல் ஆடத்தொடங்கிவிட்டாள் அந்த அம்மையார்.

"ஏண்டா முத்து, இன்னும் என்னடா யோசனை! நான் சொல்வதைக் கேள். சாதி கெட்டவன் வீட்டிலே பெண் கட்டினேம் என்கிற கெட்ட பெயர் நம் குடும்பத்திற்கு வேண்டாமப்பா. அந்தக் குடும்பத்தின் சாவகாசம், இனி நமக்கு வேண்டவே வேண்டாம். 'நூலைப்போல சேலை, தாயைப் போல பெண்,' என்கிற மாதிரி நாளைக்கு ஒண்ணு கிடக்க ஒண்ணு நடந்திட்டா என்னடா செய்ய முடியும்? பேசாமல் அவளை அழைத்துக்கொண்டு போய் அந்த மானங்கெட்டவன் வீட்டிலே விட்டுவிட்டு வந்துவிடு. உன் அழகுக்கு வேறு பெண்தானு கிடைக்காது? ஓடிப்போனவளின் மகள் இங்கே ஒரு நிமிஷமும் இருக்கக்கூடாது" என்று முத்துவின் தாயார் கண்ணீர் விட்டுக் கதறினுள்.

அன்னையின் கண்ணீரும், 'விபசாரியின் மகள் உன் மனைவியா?' என்ற அவன் உள்ளத்தின் கேள்வியும் அவனைத் தாயின் வேண்டுகோளுக்கு இணங்கச் செய்துவிட்டன.

ஒன்றை ஒன்ருகத் திரித்துக் கூறுதல் நாளைக் காலையில் நிறுத்தப்பட்டால், நாளை மத்தியானமே உலகம் முழுதுமே அழிந்து போய்விட வேண்டியது தான்!

—வெல்மன் பிராங்க்

★

மறுநாளே சந்தாவை அழைத்துச் சென்ருன் அவள் தந்தையின் வீட்டிற்கு. அவள் கண்ணீர்விட்டு அழுதாள்.

"வேண்டாமப்பா, இந்த விபரீதச் செயல். அவள் தாய் கிடக்கிருள். இவள் குணவதியப்பா. யோசித்துப்பார்"— கெஞ்சினர் அருணாசலம். பலனில்லை. சாந்தா வாழாவெட்டியானுள்!

மறுமாதமே விமலாவை இரண்டாந்தாரமாக மணந்துகொண்டான்.

விமலா சாந்தாவைவிட அழகி மட்டுமல்ல; பணக்காரியும்கூட ஆனல் அவளிடத்தில் இருந்த அன்பு இதயம் விமலா விடத்தில் இல்லாமல்தான் இருந்தது.

நாட்கள் பறந்து வாரங்கள் ஓடி மாதங்கள் கழிந்து ஆண்டுகள் இரண்டு எப்படியோ உருண்டு ஓடின.

3

வாழ்வில் வளமையைக் கண்டு இன்புற வேண்டிய வாலிப வயதில் துன்பத்தைத்தழுவிக்கொண்டிருக்கிறேமே என்ற ஏக்கம்-

## நினைவுச் சின்னம்

எழுதியவர்: இளமைப்பித்தன்

★

விலை ரூ. 1—0—0

'...மொத்தத்தில் இளமைப்பித்தன் எதை எழுதினாலும், எப்படி எழுதினாலும் சோபிக்கக்கூடிய நடை. இது இயற்கை அவருக்கு அளித்திருக்கும் செல்வம். இந்தச் செல்வத்தின் துணைகொண்டு அவர் வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடிப்பாரென்று நான் நம்புகிறேன்...'

—முன்னுரையில் 'விந்தன்'

★

பொன்னி லிமிடெட்

த. பெ. எண் 1165, சென்னை-21

தாய் செய்த குற்றத்திற்காகத் தான் தண்டனை அனுபவிக்க வேண்டுமா என்ற கேள்வியால் ஏற்பட்ட துயர கீதம்—தன் எதிர்காலமே ஒரு பயங்கரப் பாலைவனந்தானு என்ற சஞ்சலம் ஆகிய இத்தனையும் அவள் இதயத்தைக் கூறு போட்டுக் கொண்டிருந்தன. உடல் நலமற்றுப் படுக்கையில் விழுந்தாள் சாந்தா.

தன் வாழ்வின் உயிர் ஒளியாகக் கருதிய அருமை மகளின் வாழ்வு கருகிவிட்டதே என்ற வேதனை-அந்த அளவுக்கு மகளின் வாழ்வுப் பாதையில் படுகுழி வெட்டிச் சென்றுளே தன் மனைவி என்ற அடங்காதக் கோபம் ஆகிய அத்தனையும் ஏககாலத்தில் சிந்தனையைத் தாக்கக் கண்ணீர் விட்டுக்கொண்டு சலங்கினர் அருணசலம்.

சாந்தி இழந்த சாந்தாவின் உடல் உருக்குலைந்தது. அவள் உள்ளம்மட்டும் கணவன் முத்துவையே நினைத்துக்கொண்டிருந்தது. கணவன் எப்படியாவது இன்பமாக இருந்தால் போதும் என்றுதான் எண்ணினாள். ஆனால் அவளது பொங்கும் இளமை அவள் உள்ளத்தை எரித்துக்கொண்டு வந்தது.

சாவிடம் தஞ்சம் புகுமுன் தன் கழுத்தில் தாலிகட்டிய கணவன் முகத்தை ஒரு முறை பார்க்க வேண்டுமென்ற ஆசைத் தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது அவளிடம். அந்த ஆசையை நிறைவேற்றுவதற்காக அவள் அவனுக்கு எழுதிய கடிதங்கள் கணக்கற்றவை.

ஆனால் ஒரு பதிலும் வரவில்லை.

### 4

உருண்டோடிப் போன அந்த இரண்டாண்டுகளிலே தன் அன்னையையும் இழந்துவிட்டான் முத்து. ஆரம்பத்தில் விமலா நடந்துகொண்ட முறைக்கும் இப்பொழுது அவளுடைய நடத்தைக்கும் காரணம் புரியாது குழம்பி நின்றான் முத்து. அவளிடம் காணும் புன்னகையை இப்பொழுது அவன் காணவேயில்லை. அவளுடைய எதேச்

சதிகாரத்தைக் கண்டு அவன் திகைத்தான்.

கடந்த இரண்டு நாட்களாக ஆபீஸ் விஷயமாக எங்கேயோ வெளியூர் சென்று விட்டு நேராக வீடு நோக்கி வந்தான் முத்து.

வீட்டின் வாயிற்படியில் ஏறினான்! வியப்பின் வயப்பட்டு நின்றான். வீடு பூட்டிக் கிடந்தது. அவன் உள்ளம் 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது. தன்னிடமிருந்த சாவியைக் கொண்டு கதவைத் திறந்து வீட்டினுள் சென்றான். இருள் மண்டிக் கிடந்த வீட்டில் ஒளியை உண்டாக்கினான்.

"எங்கு சென்றிருப்பாள்?"— மீண்டும் ஒரு கேள்வியை எழுப்பியது அவன் உள்ளம். ஏதோ சிந்தித்தவண்ணமாகச் சாய்வு நாற்காலியில் அமர்ந்தான். அப்பொழுதுதான் மேஜையின் மீது கிடந்த அந்தக் கடிதத்தைப் பார்த்தான்.

'பொருந்தாதக் கணவருக்கு' —இப்படியாக உறையின் மேல் எழுதியிருந்தது. படிக்கலானான்.

பெற்றோர்களின் பிடிவாதத்தினால் தங்கள் மனைவியான விமலா எழுதியது.

கூண்டிலடைக்கப்பட்ட பஞ்சவர்ணக்கிளியாக இருக்க நான் விரும்பவில்லை. என் உள்ளத்தை இளம் வயதிலேயே கவர்ந்தவர் ஒருவர் உண்டு. அவரையே நான் மணந்துகொள்ளவிருந்தேன். பெற்றோர்களோ என்னைப் பிடிவாதமென்ற சிறையில் தள்ளி அவர்கள் நினைத்ததை முடித்துக் கொண்டனர். என் சுதந்தரத்தைப் பறித்தனர். நீங்கள் படித்தவர்; யோசித்துப் பார்க்க வேண்டும். மனமில்லாத ஒருவரிடம் கூடி எப்படி இல்வாழ்வு நடத்தமுடியும்? ஆகையால் என் உள்ளம் விரும்பியவருடன் வாழ விரும்புகிறேன். எனவே போகிறேன். என்னைத் தேட வேண்டாம் என்னை மறந்து விடுங்கள். மன்னிக்கவும்.

விமலா"

எந்தக் குற்றத்திற்காகச் சாந்தாவை வாழாவெட்டியாக்கினானோ, அதே குற்றத்தை இப்பொழுது விமலா செய்துவிட்டாள்.

குழம்பிக் கிடந்த அவன் இதயத்தில் சாந்தா தலைவிரி கோலத்


"சந்தேகம், பயம், மிருக உணர்ச்சி மூன்றும் மனித உள்ளத்திலிருந்து சுரண்டும்வரை இவ்விதமான பழக்க வழக்கங்கள் இருந்துதானம்மா தீரும்!"

★

உலக அரங்கில்

திட்டியவர்: டி. கே. சீனிவாசன்

★

விலை ரூ. 1—0—0

★

பொன்னி லிமிடெட்
த. பெ. எண் 1165, சென்னை-21

## கடல் முத்து

ஆசிரியர்: எஸ். ஆறுமுகம்

★

- சாவிலே வாழ்வு
- தங்கச்சி
- வாழப் பிறந்தவள்
- போட்டி
- புதிர்
- குழந்தை உள்ளம்
- நடிகை
- ஏய் காளி
- மையலும் தையலும்
- கடல் முத்து

ஆகிய சுவைமிக்க பத்துச் சிறுகதைகள்

விலை ரூ. 1-0-0

பொன்னி லிமிடெட்

த. பெ. எண் 1165, சென்னை-21


துடன் அழுத வண்ணமாகத் தோன்றினாள். "ஓடிப்போனவள் மகள்தான் நான்; ஆனால் ஒழுக்கம் கெடாதவள். என்னை உதறி விட்டு விமலாவை மணந்தீரே அவள் செய்ததென்ன?" என்று அவனைப் பார்த்து அவ்வுருவம் கேட்பதுபோலிருந்தது.

"சாந்தா, சாந்தா!"—அவன் வாய்விட்டு அலறினான்.

சாந்தா—விமலா இவர்கள் இருவரையும் இரண்டு எல்லைக் கோடுகளாக்கி அவற்றிக்கு இடையே தாவியோடிக்கொண்டிருந்தது அவனுடைய மனம்.

மேஜையின்மீதிருந்த சாந்தாவின் கடிதங்களைப் புரட்டிக்கொண்டிருந்தான். அவற்றில் ஒன்று அவன் கவனத்தைக் கவர்ந்தது. அதைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

"அன்பரே,

பல கடிதங்கள் எழுதினேன். நீங்கள் ஒன்றுக்காவது பதில் எழுதவில்லை. நீங்கள் என்னை உதாசினப் படுத்தலாம்; நான் உங்களை அப்படி நினைக்கவில்லை. உங்களுக்காகவே வாழ்கிறேன்; உங்களுடையவளாகவே வாழ்கிறேன்!

இன்று நான் மரணத்தின் பிடியிலே தத்தளித்து நிற்கிறேன். என்னை நீங்கள் மனைவியாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், என்னுடைய கடைசி ஆசையையாவது பூர்த்தி செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஆம்; ஒரு முறை இங்கு வந்து போங்கள். உங்கள் அன்பு முகத்தை நான் ஒருமுறை பார்த்தால் போதும். உங்கள் வருகைக்காக ஏங்கித் தவிக்கும் அபலையின் வேண்டுகோளை நிராகரிக்காமல் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

சாந்தா"

சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். மணி சரியாக ஒன்று அடித்தது. உடுப்புகளை மாற்றிக்கொண்டு, புகை வண்டிக்குச் செல்லத் துரிதமாகக் கிளம்பி வாசற்படியை விட்டு இறங்கினான்.

"சார் தந்தி"

'சாந்தா மாரடைப்பால் மாண்டு போனாள்!'




## பத்தொன்பதாவது அத்தியாயம்

புயல் எழுந்தது; புழுதி பறந்தது. விண்ணுக்கும் மண்ணுக்குமாக எழுந்திருந்த தூசித்திரை விழிகளுக்குப் பொருள்கள் புலப்படாமல் செய்தது. கனமான பொருள்கள் கூட அந்தக் காற்றில் காகிதங்களாகிப் பறந்தன. குமுறிக்கொந்தளிக்கும் கடலருகே ஒரு விஞ்ஞானியும் கவிஞனும் நின்றுகொண்டிருந்தனர். உயர்ந்தெழும் அலைகள் கவிஞனுடைய உள்ளத்தில் பட்டன போலிருக்கிறது; உடனே உரத்துப் பாடத் தொடங்கினான். விஞ்ஞானி வாய்விட்டுச் சிரித்தான். அலைகடலோடு மனித இதயத்தை எப்படி ஒட்பிடுகிறான் கவிஞன் என்பது புரியவில்லை அவனுக்கு. என்னதான் புயல் கடுமையாக வீசினாலும்

அதன் வேகத்தை மேற்பாப் போடு தடுத்து நிறுத்திவிட்டு ஆழக்கடல் தன் அடித்தளத்தை அமைதியாகவே வைத்திருக் கிறது. ஆனால் மனித உள்ளமோ......? சிந்தனை உதிர்த்த சிரிப்பொலி கடலெழுப்பிய அலைஒலியோடு கலந்தபோது அற்புதமான பின்னணியாக அமைந்தது.

படப்பிடிப்பு மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. வெளியூருக்குச் சென்று சில காட்சிகளைப் பிடிக்க இருந்தார்கள். மோகனாவும் சுந்தரியும் போக வேண்டி நேரிட்டது. அன்று அதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தனர் அவர்கள் இருவரும். ஏதோ ஒரு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான் சேகரன். திடீரென்று ஆவேசம் ஏற்பட்டதுபோல அந்தப் பத்திரிகையை மோகனா முன் வீசியெறிந்தான்.

“இதற்கென்ன சொல்லு கிறாய், மோகனா?” என்றான் அதைத் தொடர்ந்து.

அவனைத் திரும்பிப் பார்த்தாள் மோகனா. கொதிப்பேறியிருந்த அவன் விழிகள் உள்ளம் ஒரு உலைக்களமாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டின. கீழே கிடந்த பத்திரிகையை எடுத்துப்புரட்டினாள். ஒரு குறிப்பிட்ட செய்தியைக் கோடிட்டுக் காட்டியிருந்தார்கள் அதில்.

“............தெருவிலிருக்கும் சக்கு என்ற பெண்...தொழில் நடத்தி வருகிறாளாம். இவள் நடத்தை பிடிக்காமல் இவளுடைய அத்தான் சேகரன் என்பவன் எங்கேயோ ஓடிவிட்டானும். முழு விபரங்களும் கிடைத்தவுடன் வெளியிடுகிறோம்.”

உச்சி வெய்யிலில் சூடேறிய மணற்பரப்பில் செருப்பும் குடையுமில்லாமல் நடப்பது போலிருந்தது மோகனாவுக்கு. நிமிர்ந்து சேகரனைப் பார்த்தாள்.

“ஒன்று அவள் ஒழிய வேண்டும்; இல்லாவிட்டால் நான் இந்த ஊரைவிட்டு ஓடவேண்டும்” என்றான் அவன்.

மோகனாவுக்கு என்னென்னவோ சொல்லவேண்டும் போலிருந்தது. ஆனால் அவள் மனத்தில் சக்குவின் உருவம் தோன்றியது. எப்படியாவது அவளுக்கு வாழ்வமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற நினைவு அவளை உணர்ச்சிவயப்படாமல் தடுத்து விட்டது. ஏதோ ஒரு இலட்சியத்தைக் கற்பித்துக்கொண்டு அதற்கானத் திட்டங்களை ஒழுங்காக வகுத்துக் கொள்ளாத அந்தத் துர்ப்பாக்கியனைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவனுக்கு அடங்கிய சக்குவையும் அனாதவாக விட்டு விட்டான்; அண்டிய மோகனாவையும் தனக்குள் அடக்கிக் கொள்ளத் துணிவில்லாது அவதிப்படுகிறான்.

சேகரன் தீட்டி முடித்திருந்த சித்திரங்கள் அத்தனையும் சுற்றிலும் மாட்டப்பட்டிருந்தன. அவற்றைப் பார்க்கப் பார்க்க மோகனாவுக்கு மனம் துடித்தது. முள் காட்டில் நடந்து செல்லு

பவன்மண்டிக் கிடக்கும் மலர்க்கூட்டத்தில் மனம் செலுத்தியது போல தோன்றின அவையத்தனையும். அவதிஅழகை உருவாக்கியிருந்தது. அதனால் அதை ரசித்து எவரும் மனதை இழந்துவிட முடியாமல் ஒவ்வொரு சித்திரமும் அமைந்திருந்தது. திரையில் மோகனாவின் உருவத்தைத் தீட்டுவதற்கு மாறாக அவளுடைய உள்ளத்தை பதித்திருந்தான் அந்த ஓவியன். சுற்றுச்சார்பும் அதேவிதமாக உருவாகியிருந்தது. அவதி நிறைந்த அவளுடைய வாழ்வில் குறுக்கிடும் அத்தனைபேரும் ஏன் அலங்கோல உருவங்களாகவே இருக்கிறார்கள்? இதற்கான காரணத்தை கண்டுபிடிக்க முயன்றாள். அவள் ஒருவேளை உலகம் என்ற திரையில் உயிரினங்களாகிய சித்திரங்களைத் தீட்டிய ஓவியன் உன்மத்தம் பிடித்தவனாக இருந்திருப்பானோ?



சேகரனைப் பார்த்தாள். அவன் அதற்குள் ஜன்னல் ஓரமாகச் சென்று வீதியைப் பார்த்துக் கொண்டு நின்றான். சிதறிப் போன மண்சட்டியைத் தவற விட்ட ஏழைச் சிறுமி பார்ப்பது போலிருந்தது அவன் முகத் தோற்றம். போதிய வயதடைந்

ஒரு பெண்ணின் முகம் ஒரு காலத்தில் அவளது அதிர்ஷ்டமாக இருந்தது ; ஆனால் இப்போதோ அது டாக்டரின் அதிர்ஷ்டமாக இருக்கிறது.

—யாரோ

தும் மடியில் தவழும் குழந்தையாகவே நடந்து கொள்ளும் அவனைப் பார்க்க அவளுக்கு இரக்கந்தான் ஏற்பட்டது.

அன்று மாலையில் மோகனாவையும் சுந்தரியையும் அழைத்துச் செல்ல முதலாளியின் கார் வந்திருந்தது. இருவரும் புறப்பட்டனர்.

"நீங்களும் எங்களோடு வாருங்களேன், சேகர். நிம்மதியாகப் போய்வரலாம்" என்று அழைத்தாள் மோகனா.

"எப்படி வெளியே தலைகாட்டுவேன், மோகனா?" என்றான் சேகரன்.

அவன் இதயத்தில் எழுந்து சரிந்து கொண்டிருந்த எண்ண அலைகளில் அளவுக்கு மீறிக் கொந்தளிப்புக் காணப்பட்டது.

வீட்டை விட்டுச் சிறிது தூரம் கடந்த பிறகு மோகனா சுந்தரியிடம், "இந்த ஆண்களே இப்படித்தான். ஒரு பெண்ணுக்கு வாழ்வமைத்துக் கொடுப்பதில்லை. அவளாக வாழ்வு தேடிக்கொண்டாலும் கேவலமாகப் பேசிக் கேலி செய்கிறார்கள். அவள் வீட்டுக்குள் பூட்டப்பட்டிருந்தால் கூட உள்ளே நுழையக் கன்னக்கோல் தேடியலைகிறார்கள் ; வெளியே தலைகாட்டினால் வேட்டையாடுகிறார்கள். இத்தனையும் செய்துவிட்டு அவள் கற்போடிருக்க வேண்டும் என்பதையும் எதிர்பார்க்கிறார்கள்" என்றாள்.

சுந்தரிக்கு ஒன்றும் விளங்கவில்லை. மர்மக் கதைகளில் வரும் கதாபாத்திரத்தைப்போல அவள் பேசுவதும் நடப்பதும்......... தன்னைப்பற்றி எதையுமே வெளியிடாமல் ஒளித்து வைக்கிறாள். எதிர்பாராத நேரத்தில் ஏதாவது ஒரு குழுறல் ஏற்பட்டுவிடுகிறது. உடனே எல்லாவற்றையும் இழந்து விட்டதைப்போல ஏங்கித் தவிக்கிறாள். அவள் பயங்கரமானவளா? அல்லது பரிதாபத்துக்குரியவளா? ரேடியோ நாடகங்களைக் கேட்பதுபோலத் தான் அவள் வாழ்வையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

"யார் அக்கா அந்தச் சக்கு?" என்றாள்.

"சேகரின் மாமன் மகள்!"

"அப்படியானால் நீ.......?"

ஏதோ சிந்தனையில் ஈடுபட்டிருப்பதைப் போல வீதியையே பார்த்துக்கொண்டிருந்தாள் மோகனா. கார் கடை வீதியைக் கடந்து போய்க்கொண்டிருந்தது. மந்தையா அல்லது மனிதச் சந்தையா என்பதை நிதானிக்க முடியாமல் மக்கள் மண்டிக்கிடந்தனர் தெருக்களில். எங்கே போவது என்பது புரியாமல் நடப்பவர்களைப் போலத் தோன்றினர் பலர். அந்தக் கூட்டத்தில் வேகமாகவும், போக முடியாமல் மெல்லவும், நகரமுடியாமல் அவதிப்பட்டுக் கொண்

டிருந்தான் கார் டிரைவர். குறுக்கே யாராவது வந்துவிடுவார்கள்; திடீரென்று காரை நிறுத்துவான். சுந்தரியும் மோகனுவும் ஒருவரோடொருவர் மோதிக்கொள்ளுவார்கள். ரயில் வண்டிகளில் சாமான்களை ஏற்றி இறக்கும் கூலிகள் அவற்றின் அருமை தெரியாமல் கடமை ஒன்றிலேயே கவனம் செலுத்துவதைப்போலக் காரை ஓட்டிச் சென்றான் அவன்.

கார் கடைத்தெருவைத் தாண்டி அடுத்த தெருவிற் புகுந்தது. எதிரே வந்த உருவமொன்றில் மோகனுவின் பார்வை மோதிக்கொண்டது. அவள்...பத்மா!

"டிரைவர்! காரை நிறுத்து" என்று கூச்சலிட்டாள் மோகனு.

கார் பத்மாவின் அருகே சென்று நின்றது. திரும்பிப் பார்த்த பத்மா திகைத்துப் போனாள். அந்த நேரத்தில் மோகனுவைச் சந்திக்க முடியும் என்பதை அவள் எதிர்பார்க்கவேயில்லை. அவளுடைய முகத்தையே பார்த்தாள். விளம்பரச் சித்திரத்தில் காணப்பட்ட சிரிப்பு......? அதன் சின்னங்கள் கூடக் காணப்படவில்லை. அதற்குள் அங்கே கூட்டம் கூடிவிட்டது.

"சீக்கிரம் உன் விலாசத்தைக் குறித்துக்கொடு அக்கா. இரண்டுமூன்று நாட்களில் திரும்பி விடுவேன். வந்ததும் உன்னைச் சந்திக்கிறேன்" என்றாள் மோகனு.

பத்மாவால் அங்கே அதிக நேரம் நிற்க முடியவில்லை. கூட்டத்தில் நின்ற ஒவ்வொருவரும் முண்டியடித்துக்கொண்டு மோகனுமுன் காட்சியளிக்க முயற்சி செய்துகொண்டிருந்தனர். அவசரம் அவசரமாக ஒரு துண்டுக் காகிதத்தில் தன் விலாசத்தைக் குறித்துக் கொடுத்தாள் அவள். ஏதோ சொல்ல நினைத்தாள். அதற்குள் அங்கே நின்றோரின் ஆர்ப்பாட்டம் அதிகமாகிவிட்டது. காரும் புறப்பட்டுவிட்டது.

ஊரைக் கடந்து ஓடிக்கொண்டிருந்தது கார். காலியாக இருந்த நீண்ட பாதையில் அடிக்கடி 'ஹார்ன்' ஓசை கொடுத்துக்கொண்டே வேகமாக ஓட்டினான் அந்த டிரைவர். "அம்மா" என்று அடிக்கடி கூவிக்கொண்டு துள்ளிக் குதித்தோடும் கன்றை நினைவுபடுத்தியது அது மோகனுவுக்கு. அந்தி வானம் இன்னும் சிவக்கவில்லை. பழுக்காத கதிரவன் பொன்னிறமாகக் காட்சியளித்தான். கூடுகளுக்குத் திரும்பும் பறவைகளின் கூட்டம் பார்க்க வேடிக்கையாக இருந்தது. உலாவப் புறப்பட்ட தம்பதிகள் எதிரே வந்துகொண்டிருந்தனர். குழந்தை கையிலும் கொலுப்பொம்மை பக்கத்திலுமாக வந்துகொண்டிருந்த அந்த ஆணைப் பார்த்தாள் மோகனு. அந்தப் பெண், ஆணின் முகத்தைப் பார்த்துக்கொண்டே ஏதோ சொன்னாள். உடனே அவன் அவளுக்கு வெட்கமேற்படும்படி எதையோ சொல்லி

"...தம்பி, குறி கேட்கவேண்டு மானல் தெய்வத்தைக் கேட்காதே. உன் மனதைக் கேள். உனக்குப் படிக்க ஆசையிருந்தால் தெய்வத்தின் அப்பனுக்குக்கூடப் பயப்படாமல் படிக்கப் போ. நன்ருகப்படித்து, பாமர மக்கள் இந்தத் தெய்வ வெறிக்கு ஆளாகாதபடி ஏதாவது பெருஞ் செயல் புரிவாயாக .."

—காண்டேகர்

முகம் சிவக்க வைத்தான். முழுதும் அந்தக் காட்சியை அனுபவிக்கமுடியாமல் கார் அவர்களைக் கடந்து ஓடியது. வானம் சிவந்தது. மேற்றிசை வானத்தில் வெண்மேகத் திரள் படிந்தது. நீலநிற வானம் நெஞ்சில் குளுமை படியும் விதம் அமைந்திருந்தது. அதன் தொடர்ச்சி...? இருள் மெல்ல மெல்லக் கலந்து படிந்து பதிந்தது.

முதல் நாள் படப்பிடிப்பு மோகனவுக்குத் தொல்லையைத்தான் கொடுத்தது. கடும் வெய்யிலில் நிறுத்திக் காதல் மொழிகளைப் பேசச் சொன்னர்கள். வியர்க்க விறுவிறுக்க நின்று கொண்டிருந்த அவளைத் தேவையில்லாத நேரங்களில்கூடக் கதாநாயகனுக நடித்தவன் தொட்டு நடிக்கத்தொடங்கினன். எப்போது இது முடியும் என்று ஏங்கிக் காத்திருந்தாள். முடிந்ததும் தங்கியிருந்த வீட்டுக்குத் திரும்பச் சுந்தரியைத் தேடினள். அவளை அங்கே பார்க்கமுடியவில்லை. தனியாகவே வீட்டுக்குப் போக நேரிட்டது.

வெகுநேரங் கழித்துச் சுந்தரி வந்தாள்.

"எங்கே போயிருந்தாய், சுந்தரி?" என்று கேட்டாள் மோகன.

உடனே சுந்தரி "எல்லோரும் போனப்போலே நானும் போனேன் மாங்காத்தோப்பு" என்று பழைய இசைத்தட்டின் பாடலை மறுபடியும் பாடத் தொடங்கினள்.

மோகனவுக்கு அது வேடிக்கையாகவு மிருந்தது; வேதனையாகவு மிருந்தது.

"என்னைத் தனியாகவிட்டு ஏன் போனய், சுந்தரி?" என்று கேட்டாள் மோகன.

"உன்னைப்போல வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கச் சொல்லுகிருயா, அக்கா? எனக்கு அது பிடிக்கவே இல்லை. நான் உன்னைச் சந்தித்த அன்றிலிருந்து ஒரேமாதிரி நடக்கிருய்; அதே விஷயங்களைத் திரும்பத் திரும்பப் பேசுகிருய். என்னையும் சேகரையுந் தவிர வேறு எவரோடும் பழக மறுக்கிருய். இது எப்படி உன்னல் முடிகிறது என்பதுதான் எனக்கு விளங்கவில்லை."

"எனக்கு மற்றவர்களோடு பழக வெறுப்பாக இருக்கிறது, சுந்தரி" என்ருள் மோகன.

ஆடைகளை மாற்றிக்கொண்டிருந்தாள் சுந்தரி; உடனே அவள் பக்கம் திரும்பி, "பழகாமல் ஒதுங்குவதால்தான் அந்த வெறுப்பே உண்டாகிறது, அக்கா. ஆருக ஓடிக்கொண்டிருப்பது எவ்வளவு ஆனந்தம்

தெரியுமா? அது கூடத் தேவையில்லை. பறந்து விரிந்த கடலாகவாவது இருக்கலாம். நீ... நீ... குட்டையைப் போலத் தேங்கிக் கிடக்கிறாய். எருமை மாடுகளைக் குளிப்பாட்டத்தான் அந்தத் தண்ணீர் உதவும்" என்று நிறுத்தினாள்.

அன்று இரவு படுக்கைக்குப் போகும் வரை சுந்தரியின் பேச்சைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள் மோகனா. அவள் வாழ்விலே எப்படிச் சலிப்பேற்பட்டது என்பதற்கான காரணம் அன்று வரை அவளுக்கு விளங்கவில்லை. ஆனால், சுந்தரி சொன்னவை... இதயம் என்ற இசைத்தட்டில் பதிந்திருந்த அந்தக் கருத்துக்களை நினைவு ஊசியாகி ஒலிக்கச் செய்தது.

ஒரு பகல் அழிந்தது; இரவும் எதற்கும் உதவாமலே ஒழிந்தது. மறுபகலை உருவாக்கினான் கதிரவன். அவன் மறையும் போது அதுவும் மரணமடைந்தது.

குளிர் நிலவின் முழு ஒளியும் கொட்டிக்கிடந்தது வானத்தில். தன் மனதைப் பட்டமாக்கி அதைச் சுற்றி வட்டமிடச் செய்திருந்தான் சோமு. இயற்கை அமைத்திருந்த அந்த எழிலரங்கில் இன்பக் காவியங்களை அரங்கேற்றத் துடியாய்த் துடித்தது அவன் இதயம். திரும்பிப் பத்மாவைப் பார்த்தான். கருமுகில் படிந்திருந்தது அந்தக் காரிகையின் முகத்தில்.

"வானத்தில் சந்திரன் வந்திருக்கிறான், பத்மா" என்று அவன் கண்ட அதிசயத்தை அவளுக்கும் தெரிவித்தான்.



"வாழ்க்கையில் கதிரவன் காய்கிறானே, சோமு" என்றாள் பத்மா ஏக்கத்தோடு.

படுக்கைக்குப் போகும் பதியைப் பாலெடுத்துத் தொடர அடுப்படிக்குப் போன பெண், அங்கே பூனை உருட்டிய காலி பால்செம்

"என்ன வேதனை உனக்குப் பத்மா?" என்று கேட்டுக் கொண்டே அவளருகில் சென்றான் சோமு.

"வேதனை ஒரு தொத்து வியாதி, சோமு! அது நமக்குத்தான் ஏற்படவேண்டும் என்பதில்லை. நமக்கு நெருங்கியவர்களில் யாருக்கு ஏற்பட்டாலும் நம் நெஞ்சை பற்றிக்கொள்ளும்"

"உன் பள்ளித் தோழி யாருக்காவது..."

ஒரு நீண்ட கடிதத்தை எடுத்துச் சோமுவின் கையில் கொடுத்தாள் பத்மா. சோமு படிக்கத் தொடங்கினான்.

"அக்கா,

நெருங்கிப் பழகாமல் எப்போதோ ஒரு சமயத்தில் சந்தித்த எனக்கு இந்தக் கடிதத்தை எழுதும் துணிவு எப்படிப் பிறந்தது என்று ஆச்சரியப்படுவாய். எனக்கும் கூச்சமாகத்தான் இருக்கிறது. ஆனால் எத்தனை நாட்களுக்குத்தான் குப்பை கூளங்களை இதயத்தில் ஒளித்துவைத்திருக்க முடியும்? எடுத்தெறியாவிட்டால் என் வாழ்வே கெட்டழிந்து விடுமோ என்ற ஏக்கம் ஏற்பட்டுவிட்டது எனக்கு என்று நினைத்து விடாதே. மீட்சிக்கான சகல வழிகளும் அடைபட்டுப்போய்ச் சாக்காடு ஒன்றுதான் எஞ்சியிருப்பது போலத் தோன்றுகிறது எனக்கு. அணு அணுவாகத் தினந்தினம் சித்திரவதை செய்யப்படுவதைவிட உடனடியாக வாழ்வை முடித்துக் கொண்டால்... கடந்து செல்லும் நாள் ஒவ்வொன்றையும் மரணப்பாதையில் பதித்திருக்கும் மைல்கல்லாகவே மதிக்கிறேன். எத்தனையாவது மைல்கல்லில் என் இறுதி மூச்சு எழுந்தடங்கும் என்பதுதான் ............சாகும் நோத்திலாவது சஞ்சலம் இல்லாமல் இருக்கலாமே என்றுதான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

நீ யார், எப்படிப்பட்டவள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ யாராக இருந்தாலும் சரி, இரக்கத்துக்குப் பஞ்சமேற்பட்டிருக்கும் இந்த உலகத்தில் என்னை அன்பும் அனுதாபமுமாகப் பார்த்து ஆறுதலளித்தது நீ ஒருத்திதான். அதனால்தான் என்நெஞ்சைத் திறந்து காட்ட முன் வந்திருக்கிறேன். அருவருப்பே உருவான என் வரலாறு உன்னிடத்தில் அனுதாபத்தை உண்டாக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை; காரித்துப்பத்தான் தோன்றும். ஆனால் அந்த எச்சிலில் எப்படியாவது ஒருதுளிக்கண்ணீரைக் கலந்துவிடு. அதுதான் இந்தக் கதியற்ற பெண்ணின் வேண்டுகோள்.

இந்த நள்ளிரவு நேரத்தில் உலகம் என்னைத் தனியே விட்டு ஒதுங்கியிருக்கிறது. என்னைச் சுற்றிலுமுள்ள என்

லோருமே உறங்கிக்கொண்டிருக்கிறார்கள். சலனமற்ற சடலங்களாக இல்லாமல் இடைவேளைவிட்டுப் புரண்டு படுக்கும் அவர்களையே பார்க்கிறேன். உடலுக்கு ஓய்வளித்து உள்ளத்துக்கு வேலை கொடுக்கும் அவர்கள்...அவர்களுடைய இமைகளுக்கும் விழிகளுக்கும் இடையே எத்தனை எத்தனை இன்பக் கனவுகள் கூத்தாடுகின்றனவோ, தெரியவில்லை. இறந்தகாலம் அவர்களுக்கு எரிமலையாக இருந்தது; எதிர்காலத்தைக் குளிர்ச்சோலையாக எதிர்பார்க்கிறார்கள். அதனால்தான் அவர்களுடைய இதயங்கள் ஓய மறுக்கின்றன. ஏக்கமும் ஆசையும் இணைந்து சதிராடும் நடனச்சாலை தானே கனவுலகம்!

கேள் அக்கா, பரிதாபத்துக்குரிய என் வரலாற்றை. உலகம் என்னை ஒரு கேலிச்சித்திரம் என மதிக்கும். அதனால்தான் அதன் கண்களுக்குப் படாமல் கூடுமானவரையில் மறைந்தே வாழுகிறேன். உயர்ந்த குடும்பங்களில் பிறந்தவர்கள் தாழ்ந்த நிலைக்கு வரவேகூடாது. மீறி வந்தாலும் உயர்வைப் பற்றித் தவறியும் நினைக்கவே கூடாது. இதை மறந்ததால் எனக்கு அளவுக்கு மீறிய மனவேதனை ஏற்பட்டுத் தொல்லை கொடுக்கிறது. உனக்குத் தெரியாது என்பதற்காக எதையும் நான் எழுதவில்லை. என் இதயத்தில் கடும்புயல் வீசியபோதெல்லாம் உதிர்ந்து விழுந்த இதழ்களை இடையிடையே இணைத்திருக்கிறேன். நான் ஒரு கேலிச்சித்திரமல்ல—ஒரு கேள்விச்சித்திரம். சமுதாயம் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லித்தானாகவேண்டும்.

முதலிலேயே உன்னிடம் தெரிவித்துவிடுகிறேன். நான் வாழ்வில் தவறியவள். ஏழை வீட்டில் பிறந்து இல்லாத கொடுமையால் இழிநிலைக்கு இழுத்துச் செல்லப்பட்டேன் என்று எண்ணிவிடாதே. நான் பிறந்த வேளை என் அப்பாவைப் பணக்காரராக ஆக்கியிருக்கிறது. அப்படித்தான் என் அம்மா அடிக்கடி சொல்லுவாள். எது எப்படியிருந்தாலும் அந்த எண்ணம் என்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்க வழிகோலியது. பள்ளியில் சேர்க்கப்பட்டேன். பத்தாவது வகுப்பை எப்படியோஎட்டிப் பிடித்துவிட்டேன். உடனே ஏணிமரம் தட்டிவிடப்பட்டது. நான் பருவமடைந்துவிட்டேனாம்!

என்னை எவர் கையிலாவது பிடித்துக் கொடுத்துவிடத் துடியாய்த் துடித்தனர் என் பெற்றோர். வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்திருப்பது உயிருள்ள மீனைக் கையில் பிடித்திருப்பது போலத்தானாம்; எப்படியாவது அது வழுக்கி விழுந்துவிடுமாம். ஆனால்...நாங்கள்




**வேலைக்காரன்:** உங்களிடம் என் சம்பளத்தைக் கூட்டச் சொல்லும்படி என் மனைவி கூறினாள்.

**முதலாளி:** அப்படியா? உன் சம்பள உயர்வுபற்றி என் மனைவியிடம் கேட்டுத்தான் முடிவு சொல்லவேண்டும்.

---

பிறந்த ஜாதியில் எங்களுக்குச் சமமான அந்தஸ்துள்ள எவரும் கிடைக்கவில்லை—இருந்தாலல்லவா கிடைப்பதற்கு? உயர்ந்த ஜாதிக்காரர்கள் எங்களோடு உறவுகொள்ள முன்வரவில்லை; மீறிவந்த ஓரிருவரும் எனக்குப் பிடித்தவர்களாக அமையவில்லை. எனக்குத்தான் எத்தனை எத்தனை கட்டுப்பாடுகள் — காவல்கள் — கண்காணிப்புகள்! வீட்டைப் பூட்டி வைத்ததாலேயே திருட்டு நடக்காமல் இருந்துவிடுமா, அக்கா? தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கும்வரை திருடர்கள் இருந்துகொண்டுதான் இருப்பார்கள்.

இந்த நிலையில்தான் அக்கா, நான் தவறிப்போனேன். பருவம் என்னைப் படுத்தி வைத்தது, அதனால் பாழானேன் என்று நினைத்துவிடாதே. சூழ்நிலை என்னைப் பாழ்செய்தது. உடல்தான் உண்டாகிறது; உள்ளம் உருவாக்கப்படுகிறது. நம்மைச் சுற்றி வளைக்கும் நிகழ்ச்சிகள்தாம் நம்மைச் சீரழிப்பதும் செம்மைப்படுத்துவதும். ஆனால் இந்த உலகம், சூழ்நிலை எப்படியமைந்தாலும் நீ ஒழுக்கத்தோடிரு என்று உபதேசம் செய்கிறது. சிங்கமும் புலியும் சிறுத்தையும் ஓநாயும் வீதிகளில் அலைந்துகொண்டுதான் இருக்குமாம்; நாம்தான் வீட்டைப் பூட்டிக்கொண்டு கூண்டில் அடைபட்டதுபோல வாழ்ந்து நம்மை நாமே காத்துக்கொள்ளவேண்டுமாம். எப்படி இருக்கிறது நியாயம்? அலையும் விலங்குகளை விரட்டி ஓட்டத் துணிவில்லாத கோழைகள் அவைகளுக்குப் பலியாகும் அப்பாவிகளைக் குறைகூறமட்டும் தவறுவதில்லை.

ஏதேதோ எழுதுகிறேன். தொடர்ந்து எழுதிக்கொண்டே போக என்னால் இயலவில்லை. இடையிடையே துவண்டு விடுகிறது

என் மனம். ஒரு சில வரிகளை எழுதுகிறேன்; பிறகு அவற்றையே ஊன்றிக்கவனிக்கும்போது என்னை யறியாமலே உருகிவிடுகிறேன். வாய்விட்டு அழவேண்டும் போலிருக்கிறது சமயங்களில். ஆனல்........என் அழுகை எவரையாவது விழிக்கச் செய்துவிட்டால்..........நான் அழுகிறேன் என்ருல் ஆவி, உடல், பொருள் அத்தனையையும் தத்தம் செய்யத் தயாராக இருக்கும் தியாகிகள் என்னைச் சுற்றிச் சூழ்ந்திருக்கிருர்கள். ஏன் வீணுக அவர்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டும்?

என்னேடு சுந்தரி என்ற நடிகையிருக்கிருள். அவள் நேற்றுச் சொன்னுள், 'நான் குட்டையாகத் தேங்கிக் கிடக்கிறேன்' என்று. இப்போது அப்படி இருக்கும்படி நேரிட்டுவிட்டது. அப்போது என்னை வீட்டுக்குள்ளேயே சிறைப்படுத்திவிட்டார்கள். எங்கள் வீட்டில் சமையலுக்கு ஆளிருந்ததால் என் உதவியோ உழைப்போ மிக மிகக் குறைவாகத்தான் தேவைப்பட்டது. என்னேடு பழகுபவர்கள் எல்லாம் ஒரே விஷயத்தைப் பற்றித்தான் பேசுவார்கள். அதுதான் கல்யாணத்தைப் பற்றியது! என் வாழ்வில் எப்போதோ நுழையப் போகிற ஆணை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலைக்கு என்னைக் கொண்டு

> "என்னுடைய மனம் ஒன்றைச் செய்யச் சொல்கிறது. ஆனல் என் இதயம் அதைச் செய்யக் கூடாதென்கிறது"
>
> "அப்படிப்பட்ட சமயத்தில் நீ உன் இதயத்தின் சொல்லைத்தான் கேட்கவேண்டும். இதயத்தின் ஒரு தவறை நீ செய்தால், அதைப் பற்றிப் பின்னர் அதிகமாக வருந்த மாட்டாய்."
>
> —லியோனர்ட் லியன்ஸ்

வந்துவிட்டார்கள். நானும் ஒழிந்த வேளைகளிலெல்லாம் உல்லாச நினைவுகளை வரவழைத்துக்கொண்டு அவற்ருேடேயே ஒன்றுகலந்துவிட்டேன்.

பொழுதைப் போக்க எனக்குக் கிடைத்த புத்தகங்கள்... அப்போது இனித்த அவைகளைப் பற்றி இப்போது எழுதக் கசப்பாகத்தான் இருக்கிறது. ஆண் பெண் உறவைப் பற்றிக் கதையெழுதுபவர்கள், ஒன்று அதை ஆண்டவனேடு தொடர்புபடுத்தி மனித அறிவுக்கு எட்டாமல் செய்துவிடுகிருர்கள்; இல்லாவிட்டால் மட்டமும் மலிவுமான வியாபாரச் சரக்காக ஆக்கிவிடுகிருர்கள்.

எனக்குக் கிடைத்த புத்தகங்கள் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவை. நாசம் எப்படி உருவாகிநடந்து முடிகிறது என்பதைக் கட்டம் கட்டமாக—ஒன்றுகூட விட்

## தபாலாபீஸ் விநோதங்கள்

க. சண்முகசுந்தரம்

★

விலை அணா எட்டு

★

"நையாண்டி கலவாத அசல் நகைச்சுவை உண்டென்றால் அது இந்தத் 'தபாலாபீஸ் விநோதங்கள்' தாம்! புத்தகத்தைக் கையில் எடுத்தால் போதும்; அதுவே நம்மைப் படிக்கச் சொல்கிறது..."

—சாண்டிபம்.

★

பொன்னி லிமிடெட்

த. பெ. எண் 1165, :: சென்னை-21


டுப்போகாமல்—நேரில் நடத்திக் காட்டுவதைப்போல விவரித்திருந்தார்கள். எதுவும் விளங்காத இளம் இதயங்களை இந்தப் புத்தகங்கள் எப்படிப்பட்ட நிலைக்கு இழுத்துச் செல்லும் என்பதை அந்த எழுத்தாளர்கள் உணர்வதே இல்லை. நான் அவைகளைப் படித்தேன். தேனைப்பற்றித் தெரியாதவனிடம் அதன் இனிமையை விவரித்துக் கொண்டே இருந்தால், தேடிப் போகத்தானே தூண்டும். என் பருவ உணர்ச்சிகள் பக்குவப்படாமல் பாழாக்கப்பட்டன. நானும் அந்தக் கதைகளில் வரும் கதாநாயகிகளில் ஒருத்தியானேன்.

அந்த எழுத்தாளர்கள் மீதும் தவறில்லை, அக்கா. அவர்கள் எழுதுவதைப் போலத்தான் இந்த உலகமும் அமைந்திருக்கிறது. பெண்கள் எல்லாம் மிட்டாய்ப் பொட்டலங்கள் என்றுதான் ஆண்கள் நினைக்கிறார்கள். சிலர் அவைகளை வாங்கிச் சேமித்துவைக்க ஆசைப்படுகிறார்கள்; பலர் அவற்றின் மேல் மொய்க்கும் ஈக்களாகவே இருந்துவிட நினைக்கிறார்கள்; ஆனால்... மேடையில் தோன்றும் உருவங்களைப் பார்த்துவிட்டு நாடக விமர்சனம் செய்வதுபோலவே வாழ்வையும் வர்ணிக்கிறார்கள் இந்த எழுத்தாளர்கள். பார்க்கிறார்கள்—பரிசீலனை செய்வதில்லை—பக்குவப்படுத்தி வெளியிட நேரமோ, நினைப்போ இருப்பதேயில்லை அவர்களுக்கு.

அதிகம் வளர்த்துவானேன்? நான் விருந்தானேன் ஒரிருவருக்கு. சாப்பிட்டு முடிந்ததும் என்னை எச்சில் இலையாக்கி எறிந்துவிட்டுப் போனார்கள் அவர்கள். இது எப்படியோ வெளியில் தெரிந்துபோனது. குடும்ப கௌரவம் குலைந்துவிட்டதே என்று குமுறினர் என் அப்பாவும் அம்மாவும். எங்களிடம் பொறாமைகொண்ட ஒரு சிலர் செய்திப் பத்திரிகைகளாகி ஊரெல்லாம் பரப்பினர் இந்தச் செய்தியை. இதன் விளைவு என்ன ஆனது தெரியுமா, அக்கா? ஆசை மகளை—அருந்

தவப் புதல்வியை—அதிர்ஷ்டத்துக்குக் காரணமானவள் என்று போற்றப்பட்டவளை விஷங்கொடுத்துக் கொல்லும் நிலைக்கு வந்தனர் என் பெற்றோர். அதற்குமேல் அங்கே இருக்க எனக்கு மனம் வரவில்லை. வீட்டைவிட்டு வெளியேறினேன்.

இரண்டு மூன்று நாட்கள் தான் தெருவில் அலைந்திருப்பேன். ஆண் என்றாலே வெறுத்து ஒதுக்கும் நிலைக்கு என்னை ஆளாக்கிவிட்டனர் வருகிறவர் போகிறவர் எல்லாம். விவரங்களை எல்லாம் எழுத எனக்கு மனங்கூசுகிறது. அதனால்தான் அவைகளை விலக்கிவிட்டு எழுதுகிறேன். அப்போதுதான் சோமு என்னைச் சந்தித்தார்.

ஐயோ! யாரோ விழித்துக் கொண்டார்கள். நேரில் காணும்போது மீதியைச் சொல்லுகிறேன்.

அன்புள்ள
மோகனு."

படித்து முடித்ததும் தலையை நிமிர்த்திய சோமுவுக்கு நேரெதிரே காதலி கழுத்தை நெறிக்கும் காதலன் படம் தென்பட்டது. ஏதோ ஒரு வீட்டில் ஒரு பெண் ஒப்பாரிவைத்து அழுதுகொண்டிருந்தாள். அவள் குரலைக் காற்று இழுத்துவந்து அவன் காதருகே ஒலிக்கச் செய்தது. அடுத்த வீட்டில் ஒரு குழந்தை அழுதது. அதைச் சகிக்க முடியாத ஆண், மனைவியின்மேல் எரிந்துவிழுந்தான்.

---

## ஏஜண்டுகள் தேவை

மதுரை
சேலம்
திண்டுக்கல்
திருப்பூர்

முதலிய ஊர்களுக்குப் 'பொன்னி'யை விற்பனை செய்ய முன்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை

★

மானேஜர்,
பொன்னி லிமிடெட்,
த. பெ. 1165 :: சென்னை—21

---

அழுகையை அடக்க அந்தத் துர்ப்பாக்கியவதி குழந்தையை ஓங்கி ஓங்கி அடித்தாள். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான் சோமு. எச்சில் இலைகளைத் தெருவில் எறியவந்த எதிர் வீட்டுப் பெண்ணை வீதியில் நின்ற ஆண் வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான். "இந்திரன் கெட்டதும் பெண்ணாலே—வானச்சந்திரன் கெட்டதும் பெண்ணாலே" என்று எங்கோயிருந்து ஒரு பித்தன் அலறிக் கொண்டிருந்தான்.

திருப்பிப் பத்மாவைப் பார்த்தான். அவன் எப்போது தன்னைப் பார்ப்பான் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பதைப் போலவே தெரிந்தது அவள் தோற்றம்.

(தொடரும்)

# பொழுது போக்கு

ராதா

## என் தங்கை

மேடைகளிலே வெற்றிகரமாக நடிக்கப்பட்டு, மக்களின் பேராதரவைப் பெற்ற சில அருமையான நாடகங்கள், திரைப்படமாக மாறும்போது டைரக்டர்களின் திறமையின்மையாலும், நாடகக்கதையைத் திரைப்படமாக்கும்போது அதற்கேற்ற மாற்றங்களைத் திறம்பட மாற்றியமைக்க முடியாததாலும், அப்படங்கள் படுதோல்வியடைந்து மண்ணைக் கவ்வியதைக் கண்கூடாகக் கண்டோம். ஆனால் 'என் தங்கை' என்ற நாடகத்தை, கதையின் சுவை சிறிதும் பாழ்படாவண்ணம், நல்ல முறையில் திரைப்படமாகத் தயாரித்து, ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுவிட்டனர் அசோகா பிக்சர்ஸார்! முதல் தயாரிப்பிலேயே 'என் தங்கை' அவர்களுக்கு அமோகமான வெற்றியைத் தேடிக்கொடுத்துவிட்டது.

தன் அருமைத் தங்கைக்காகத் தன் வாழ்க்கையைத் தியாகம் செய்துகொள்ளுகிறான் ஒரு தமையன். இப்படம், தமையன்—தங்கை பாசத்தை நன்கு விளக்குகின்றது. கலப்பு மணத்தை ஆதரிக்கிறது. குதிரைப் பந்தயத்தால் விளையும் கேடுகளைச் சித்தரிக்கிறது!

ராஜேந்திரனும், அவன் தம்பி செல்வமும், தங்கை மீனாவும், தங்கள் தாயுடன் வசிக்கிறார்கள். மின்னலால் கண்களை இழந்து குருடியாகிறாள் மீனா. இவர்களின் சித்தப்பா கருணாகரம் பிள்ளையின் மகன் சூரியமூர்த்தி, தன் தந்தைக்கு நேர் எதிராக இவர்களிடம் அன்பு காட்டுகிறான். செல்வம் தன்னுடன் கல்லூரியில் வாசித்த ராஜத்தை மணக்கிறான். ராஜத்தின் போதனையால் தன் குடும்பத்தைவிட்டுப் பிரிந்து மாமனார் வீட்டிற்கே சென்றுவிடுகிறான். சூரியமூர்த்தி மேரி என்ற பெண்ணைக் காதலிக்கிறான். ஆனால், அவனின் தந்தை இவர்களின் காதல் மணத்திற்கு ஒப்பவில்லை. மேரியைத் தேடிக்கொண்டு, சென்னைக்கு வருகிறான் சூரியமூர்த்தி. பிழைக்க வேறு வழியில்லாமல் ரிக்ஷா இழுத்துப் பிழைக்-

கிறன்! செல்வம் குதிரைப் பந்தயத்தாலும், குடியாலும் கெட்டு, மோட்டார் விபத்தில் சிக்கிக் கைகால்களை இழந்து, முடிவில் அண்ணனிடம் வந்து மன்னிப்புக்கேட்டு உயிரை விடுகிறன். கருணகரம் பிள்ளை யால் வீட்டை விட்டுத் துரத்தப் பட்ட ராஜேந்திரனும், மீனவும் சென்னைக்கு வந்து அங்கு ரிக்ஷா இழுத்துக்கொண்டிருக்கும் சூரியமூர்த்தியைச் சந்திக் கிறார்கள். கருணகரம் பிள்ளையும் சென்னைக்கு வந்து சூரியமூர்த் தியைச் சந்தித்து வீடு திரும்ப வேண்டுகின்றார். மறுத்துவிடு கிறன் மகன். அவனைப் பின் தொடர்ந்த கருணகரம்பிள்ளை மோட்டாரினல் தாக்குண்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகிறார். அங்கு நர் சாக இருக்கும் மேரியைக் கண்டு இருவரையும் மணம் செய்து கொள்ளும்படி சொல்லிவிட்டுக் கண்ணை மூடிவிடுகிறார் கருண கரம் பிள்ளை. உணவு கொண்டு வரச் சென்ற சூரியமூர்த்தி வராததால் ராஜேந்திரன் தங்கைக்கு உணவு கொண்டு வரக் கிளம்புகிறன். எதிர்

## புதுமைத் தெர்மாமீட்டர்

நோயாளிகள் சிறிது தூரத்தில் இருக்கும்போதே அவர்கள் அறியா மல் அவர்களுடைய உடல் சூட்டை அறிவிக்கக்கூடிய ஒரு புதுமைத் தெர்மாமீடர் பாரிஸில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. நோயாளி தூங்கினுல் அவரை எழுப்பாமல் உடல் சூட்டை அறிய இது உபயோகிக்கப்படுகிறது.

பாராதவிதமாகத் திருடனுக்கப் பட்டு அடிபடுகிறன். இதைக் கேட்ட மீன மனம் பொறுக்கா மல் தடுமாறி ஓடி வரும்போது விழுந்து இறந்துவிடுகிறள். இறந்த தன் தங்கையின் உடலைத் தோளில் சுமந்தவண் ணம் கடலில் இறங்கி உயிரை விடுகிறன் ராஜேந்திரன். சூரியமூர்த்தி மேரியை மணந்து மீனவின் பெயரால் குருட்டுப் பள்ளிக்கூடம் ஒன்று நடத்து கிறன். இதுதான் கதைச் சுருக்கம். தங்கு தடையில் லாமல் விறுவிறென்று ஓடு கிறது படம். இன்னும் சில காட்சிகளைக் கத்தரிப்பிரயோ கம் செய்திருந்தால், விறு விறுப்பு இன்னும் அதிகப் பட்டிருக்கும்.

அளவுக்குமீறிச் சோகக் கட் டங்கள் வருகின்றன படத்திலே. ஒன்பது முக்கிய கதாபாத்திரங் களில் ஏழு பேர் இறந்துவிடு கிறார்கள். இத்தனை பேரைச் சாகடிக்காமல் படத்தைத் தயா ரித்திருக்கலாம் என்பதே என் கருத்து. பார்க்கப்போனல், ராஜேந்திரன் இறந்த தன் தங்கையின் உடலைச் சுமந்து கொண்டு கடலில் இறங்கித் தற் கொலை செய்துகொள்ள வேண் டிய அவசியமே இல்லை. ராஜேந் திரனைச் சாகடிக்காமலேயே, கதையின் முடிவை மாற்றியிருக் கலாம்.

நடிப்பில் முதலிடம் ராமச் சந்திரனுக்கு. கத்திச்சண்டைப் படங்களுக்குத்தான் அவர் தகுதியானவர் என்று கூறிய வர்களுக்கு இப்படத்தில் தன் சீரிய நடிப்பின்மூலம் சரியான பதில் கொடுத்திருக்கிறார்.

னான் தங்கையின் மீது வாஞ்சை கொண்ட அண்ணனாக, தன் பாகத்தை உணர்ந்து, தெளிவாகப் பேசி முடிவுவரையில் ஒரே சீராக மிகத் திறம்பட நடித்திருக்கிறார். எம். ஜி. சக்கரபாணி புது மாதிரியான 'மேக்கப்'புடன் புதுவிதமான பாகம் தாங்கிக் கணக்காக நடித்திருக்கிறார். என்றாலும், இவர் நடிப்பில் வி. கே. ராமசாமியின் 'ஸ்டைல்' எட்டிப் பார்க்கிறது! நரசிம்மபாரதியின் நடிப்பில் எவ்வளவோ முன்னேற்றம் காணப்படுகிறது. நொண்டியாக வந்து கதறி அழுது நம் கண்ணீரை வரவழைத்துவிடுகிறார் பாரதி. நீண்ட நாட்களுக்குப் பிறகு பி. எஸ். கோவிந்தன் இப்படத்தில் காட்சியளிக்கிறார். சூர்யமூர்த்தியாக. அநாயாசமாக நடித்திருக்கிறார். ரிக்ஷாக்காரனாக வரும்போது வேஷப் பொருத்தமும், நடிப்பும் தத்ரூபம்! இவருக்குக் கொடுக்கப்பட்ட வசனங்கள் பொதுமக்களின் கவனத்தைக் கவருவதாய் இருக்கின்றன. புதுமுகம் என்று அறிமுகப்படுத்தப்பட்ட இ. வி. சரோஜா பேசும் வசனங்கள் இலக்கண சுத்தமாக இருக்கின்றன. அதனால் அவர் பேசும்போது இயற்கையாய் இல்லாமல் ஏதோ பாடம் ஒப்புவிப்பதைப்போல் இருக்கிறது. காதல் காட்சிகளிலும், சோகக் கட்டங்களிலும் குறைசொல்லாதவாறு முயற்சித்து நடித்து ரசிகர்களிடம் தனக்குள்ள நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்கிறார் மாதுரிதேவி. மேரியாக வரும் சுசீலா, தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை






நன்கு பயன்படுத்திக்கொண்டுள்ளார்.

பாட்டுக்களில் சில கர்நாடக மெட்டுக்களிலும், சில இந்தி மெட்டுக்களிலும் அமைந்துள்ளன. பாரதிதாசனின் இரு பாடல்களும் எடுப்பாக அமையவில்லை. பொள்ளாச்சி கமலாவும் ராஜேஸ்வரியும் ஆடும் 'தில்லானா நடனம்' கவர்ச்சிகரமாக இருக்கிறது. 'நவீன யமன்' நாடகம் படத்திற்கு அவசியமில்லை; அசம்பாவிதமாகவும் இருக்கிறது.

மற்ற தயாரிப்பாளர்களைப் போல் அல்லாமல், இயற்கைக் காட்சிகளை நிறையச் சேர்த்துப் படத்தை ரம்மியமாக்கி இருக்கிறார்கள் அசோகா பிக்சர்ஸார்.

# 83 Persons are awarded prizes in our Puzzle No. 12 (1st prize 52, 2nd prize 2, 3rd prize 27 and 5th prize 2 persons)

**Full particulars are published in the Rainbow dated . *0-7-52***

ரிஜிஸ்டர் நெ. 277 போட்டி நெ. 14

# ரூ. 25,000 பரிசு

**M8 Premier Bank of India Ltd-ல் சீல்** செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5-ம்* பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். மேற்கண்ட பரிசுகள் எங்கள் கம்பெனியின் நிபந்தனைப்படி வசூலுக்கு தகுந்தபடி பகிர்ந்து கொடுக்கப்படும்.

**முடிவு தேதி 28-7-52 விடை 12-8-52**

**AMBAL'S PUZZLES**

KEY 9. NO. 12 *32 TO 47=158

| | | | |
|---|---|---|---|
| 44 | 34 | 33 | 47 |
| 39 | 41 | 42 | 36 |
| 43 | 37 | 38 | 40 |
| 32 | 46 | 45 | 35 |

We hereby certify that the above is the solution in original deposited with us by *Ambal's Puzzles No.* 12 on 2/6/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

*For The Premier Bank of India Ltd.*

V. Ramanathan 28.6.52

*Agent. Madras.*

**பிரவேசக் கட்டணம் :** கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

**194**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— *41* முதல் *56* வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் *194* வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுபபலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபனகளுடன் சேர்த்து அனுப்ப வேணடும. வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும. போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு **RAINBOW** மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

# AMBAL PUZZLE NO 14

**28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS -21**

# பாவம், பரமசிவம்!

'அனஸ்'

பாங்கிக் குமாஸ்தா பரமசிவம் மூட்டைப்பூச்சிகளின் உபத்திரவம் தாங்காமல் படுக்கையைவிட்டு எழுந்தார்; விளக்கைப் போட்டார். சுத்தி, படிக்கல் இரண்டையும் எடுத்துக்கொண்டு படுக்கையின் அருகே வந்து உட்கார்ந்தார். படுக்கையின் மீது எண்ணிக்கையில் அடங்காமல் மூட்டைப்பூச்சிகள் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. ஒவ்வொன்ருகப் பிடித்துப் படிக்கல்மீது வைத்துச் சுத்தியால் அவற்றை யெல்லாம் யமலோகத்துக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்.

பரமசிவம் இந்த முடிவுக்கு வந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. இதுவரை என்னென்னவெல்லாமோ பண்ணிப் பார்த்துவிட்டார். மூட்டைப்பூச்சிகள் மட்டும் ஒழிந்தபாட்டைக் காணேம். அதனுல், கடைசியில்தான் இந்த யுக்தியைக் கண்டுபிடித்துக் கையாண்டு வருகிறூர். இதிலும் அவருக்குப் பூரணமாக வெற்றி கிடைத்துவிடவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

கிட்டத்தட்ட அவர் கையில் அகப்பட்ட எல்லா மூட்டைப்பூச்சிகளையும் யமலோகத்துக்கு அனுப்பியாகிவிட்டது. மறுபடியும் படுத்துத் தூங்கலாமென்ருலோ தூக்கம் வரவில்லை. அன்று விடுமுறையான தால் மத்தியானம் நன்ருகத் தூங்கிவிட்டார். ஆகவே, மேஜைமீது கிடந்த தினசரிப் பத்திரிகையை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தார்.

அவர் கண்ணில் அந்த விளம்பரம் சிக்கியது. அதையே திரும்பத் திரும்பப் படித்தார். "இரண்டே நாட்களில் மூட்டைப்பூச்சிகளை ஒழிக்கலாம். வெற்றி நிச்சயம். கீழ்க்கண்ட விலாசத்துக்கு ஆங்கிடித்தில் எழுதவும். வி. பி. பி. யில் அனுப்புகிறோம்" என்று அமிருதசரஸிலிருந்து ஒரு கம்பெனி விளம்பரம் செய்திருந்தது. அந்த விளம்பரம் பரமசிவத்துக்கு நம்பிக்கை யூட்டியது. கையோடு கையாக எழுதிவிட வேண்டுமென்று கார்டையும் பேனவையும் எடுத்துக்கொண்டு வந்து அவ்விலாசத்துக்கு உடனே எழுதினர். காலையில் எழுதுவோம் என்று விட்டுவிட்டால், ஒருகால் மறந்துபோனலும் போய்விடும் என்றுதான் இரவோடு இரவாகவே எழுதிமுடித்தார்.

ஒரு வாரம் சென்றது!

அன்று திங்கட்கிழமை. மணி பதினென்று இருக்கும். வாரத்தின் முதல்நாள் ஆனதால் பாங்கியில் ஒரே கூட்டம். 'டெபாஸிட் செக்ஷன்' கிளார்க் பரமசிவத்துக்கு வாயில் ஈ புகுந்ததுகூடத் தெரியவில்லை. 'செக்'குகள் அவர் முன்பு குவிந்துகிடந்தன. கௌண்டரில் வாடிக்கைக்காரர்கள் தேன் அடையை மொய்க்கும் ஈக்கள் போலக் கும்பலாக நின்றுகொண்டிருந்தார்கள். வந்த ஆத்திரத்தையும் எரிச்சலையும் வெளிக்காட்டிக்கொண்

---

காற்று வெளியில் நீ உன் மாளிகைகளைக் கட்டியிருந்தால் அவை விண்போகாது. அவை அமையவேண்டிய இடம் அது. இப்போது அதற்கடியில் அடித்தளத்தை அமை!

—தியோரா

ளாமல் பரமசிவம் வேலை செய்து கொண்டிருந்தார்.

கூட்டத்துக்குள் நுழைந்துவந்து கௌண்டரின் அருகே நின்று, "ஸார், உங்களுக்கு ஒரு வி. பி. பி. வந்திருக்கிறது" என்றான் தபால்காரன்.

இந்தச் சப்தம் காதில் விழுந்ததுதான் தாமதம், பரமசிவம் எல்லாவற்றையும் போட்டபடி போட்டுவிட்டு "அமிருதசரஸிலிருந்துதானே" என்றார் ஆவலும் பரபரப்பும் தொனிக்க. "ஆமாம், ஐந்து ரூபாய் பத்தணா எடுங்க" என்று சொல்லிக்கொண்டே கையெழுத்துக்காகக் காகிதத்தை நீட்டினான் தபால்காரன்.

பார்சலை வாங்கிய பரமசிவத்துக்கு ஒரே ஆவல். அசைந்ததால் பார்சல் உள்ளிருந்து கண்ணாடி சீசாக்கள் உராயும் சப்தம் கேட்டது. இரண்டு பாட்டில் மருந்து இருக்கிறது போலும் என்றெண்ணினார். எனினும் பார்சலைப் பிரித்துப் பார்க்க அவர் கைகள் துடித்தன. ஏணி நாற்காலியினின்றும் இறங்கி சுத்தி, கத்தி முதலான ஆயுதங்களை எடுத்து வைத்துக்கொண்டு பார்சலைப் பிரிக்க ஆரம்பித்தார்.

பார்சலைப் பிரித்து உள்ளே இருந்த கடுதாசிக் குப்பையை எடுத்துவிட்டுப் பார்த்தார் பரமசிவம். ஒரு சுத்தி, ஒரு வட்ட வடிவமான பௌண்டுக் கல் போன்ற கல், ஒரு சாமணம் இவை காணப்பட்டன! "ஆராய்ச்சியில் உன்னைவிட ஒரு படி முன்னேறியிருக்கிறான் இந்த அமிருதசரஸ்காரன். வெறும் கையாலல்லவா நீ மூட்டைப்பூச்சிகளைப் பிடித்துப் படிக்கல்மீது போட்டுக் கொன்றுகொண்டிருந்தாய். இவன் அதற்குச் சாமணத்தை உபயோகிக்கச் சொல்கிறான்" என்று பரமசிவத்திடம் யாரோ சொல்வதைப் போலிருக்கவே, பாவம் பரமசிவம் அப்படியே மூர்ச்சையானார்!




விலை ரு. 1—0—0




விலை ரு. 1—0—0

கதைவனம்
கீழ்ராஜ வீதி — புதுக்கோட்டை

# இலக்கியம் வளர...

**சாந்தி**
ஆசிரியர் : அகிலன்
பழனி பிரசுரம்
புதுக்கோட்டை
**விலை ரூ. 1—0—0**

அழகுமிக்க காதலின் இன்பச் சூழ்நிலையில் பிறந்திருக்கும் சிறு கதைகள் — அவை நண்பர் 'அகிலன்' கைவண்ணம் பெற்றவை என்னும்போது 'சாந்தி' யின் செல்வாக்குத்தரம் மேலேறுவது இயற்கை. ஏனெனில் கதைகள் அப்படி; சிருஷ்டி கர்த்தா அப்படி!

'முப்பது இரவுகள்' ஆவி உலகக் கற்பனைப் பின்னல்; உயிர்நாதமிடும் மனோதத்துவ அடிப்படை; முடிவுவரை மெய் சிலிர்க்க வைப்பதொன்று. 'இந்திரனுக்கு விமோசனம்' என்ற கதையில் இந்திரனுக்குச் சாப விமோசனம் கிடைத்த புதிய முடிவு வரலாறுக்கப்பட்டிருக்கிறது. 'குலதெய்வம்' உணர்ச்சி ரீங்காரமிடும் அழகிய கிராமியக் கதை. சாந்தியின் இதயதாபத்தை அழகாகச் சொல்லுகிறது 'சாந்தி' என்ற புத்தகத் [illegible] கதை.

வாழ்க்கையின் தத்துவம், காதலின் புதிர், புரட்சியின் கொந்தளிப்பு ஆகிய பண்புகள் அமையப்பெற்ற இதன் கதைகள் நான்கும் பொறுக்குமணிகளாகத் தொகுக்கப்பட்டு இருக்கின்றன.

**அகதி**
ஆசிரியர் : பா. கணேசன்
சுமதி வெளியீடு
சிதம்பரம்
**விலை ரூ. 0—12—0**

கொடுத்து வாங்கிய பணத்திற்கு மனம்திருப்திப்படும்வகையில் ஒன்பது கதைகளை உள்ளடக்கியிருக்கும் சிறுகதைத் தொகுப்பு பா. கணேசன் எழுதிய 'அகதி'. ஏற்கனவே 'மாயாவி'யின் 'அகதி' என்ற கதைத் தொகுதியொன்றும் வெளிவந்திருக்கிறது. இப்போது வெளியிட்டிருக்கும் சுமதி வெளியீட்டாளர் இதைக் கவனித்துத் தங்கள் புத்தகத்திற்கு வேறு பெயரை தலைப்பாக்கியிருக்கலாம். இத் தொகுப்பில் அவதாரம், பரிவர்த்தனை, இரு வீணைகள் ஆகியவை சிறந்துள்ளன.

—பூவை

*Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni hakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet Madras-21*



திகைப்பா, வியப்பா ?

—மருமகளில் டி. பாலசுப்பிரமணியமும்
வி. கே. ராமசாமியும்



காந்தமும் இரும்பும் !

—கல்யாணியில் நம்பியாரும் ஜி. எஸ். சரோஜாவும்

Regd. No. M. 4849 PONNI

மகத்தான ஆரம்ப தினம்!

எதிர்பாருங்கள்!

★

உல்லாசப் பொழுதுபோக்கிற்குகந்த மிகச் சிறந்த படங்கள் திரையிடப் படும்! படம் பார்ப்பவர்களுக் குத் தகுந்த வசதிகள் அமைந்துள்ளன!

★

# பாரத் தியேட்டர்

★

டாக்டர் விஜயராகவுலு ரோடு,
(தங்கசாலை டிராம் டெர்மினஸ் அருகில்)
சென்னை—21